# குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி

# தொடக்கப்பள்ளி

# 2007

© உரிமைச் செறிவு 2006 பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு. இப்பதிப்பு விற்பனைக்கில்லை. முழுப் பதிப்புரிமை உடையது. இப்பதிப்பைச் சிங்கப்பூர் கல்வி அமைச்சின் அனுமதியின்றிப் பிரதி எடுக்கக்கூடாது.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| கண்ணோட்டம் | D-1 |
| பாடத்திட்ட பொருளடக்கம் | |
| Ø மதிப்பு | D-20 |
| Ø பொறுப்புணர்வு | D-33 |
| Ø நேர்மை | D-47 |
| Ø பரிவு | D-56 |
| Ø மீளும்தன்மை | D-69 |
| Ø நல்லிணக்கம் | D-80 |

# கண்ணோட்டம்

# குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி (தொடக்கப்பள்ளி) பாடத்திட்டம்

## முன்னுரை

ஒருவரின் குணநலனுக்கு அடித்தளமாக அமைபவை பண்புகளே. அப்பண்புகளே அவரின் நம்பிக்கைகளையும் வாழ்க்கை முறைகள் பற்றிய அவரின் மனப்போக்குகளையும் பரந்த உலகம் பற்றிய அவரின் எண்ணங்களையும் நிர்ணயிக்கின்றன. குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி நமது மாணவர்களின் அறநெறி வளர்ச்சியில் கவனம் செலுத்துவதுடன் பண்பாட்டு விழுமங்களைப் பெற்றுக்கொள்ளவும் பொருத்தமான தெரிவுகளைச் செய்யவும் வழிகாட்டியாக அமைகின்றன. மேலும் விழுமங்களுக்கு ஏற்ப மனப்போக்குகளை வளர்ப்பதிலும் அவை உதவுகின்றன. தங்களிடத்தும் மற்றவர்களிடத்தும் சுற்றுச் சூழலுக்கு ஏற்ப மனப்போக்குகளை நிர்ணயிக்கவும் இப்பண்புகளே காரணமாகின்றன. ஒரு பிள்ளையின் அறநெறி வளர்ச்சியில் குடும்பம் முக்கியமான பங்கை ஆற்றுகிறது. அதே வேளையில் அவனுக்கு அறிவு, வாழ்க்கைத் திறன் ஆகியவற்றை வழங்குவதிலும் நெறி தவறாத நேர்மையாளனாகவும், பொறுப்புணர்வும் பரிவும் மிக்க குடிமகனாக வளர்வதற்கும் சரிசமமான பங்கை வகிக்கிறது பள்ளி.

## காரண விளக்கம்

நமது இளம் பிள்ளைகள் அறநெறிக் கொள்கைகளில் வேரூன்றி நிற்கும் வகையில் குடியியல் மற்றும் அறநெறிக்கல்வி (தொடக்கநிலை) பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அறநெறி தவறாத நேர்மையாளராக இருப்பதும் நவீன சமுதாயத்தில் அறநெறி மதிப்புகளின் தேவையைப் புரிந்துகொள்வதும் முக்கியமாகும். மேலும் அவர்கள் சமூக, மனவுணர்வுத் திறன்களைப் பெற்று, அறநெறி மதிப்புகளைச் சிறந்த முறையில் வெளிக்காட்ட வேண்டும். இத்திறன்கள் அவர்கள் சமூக மனவுணர்வு சவால்களை எதிர்நோக்கும்போது அஞ்சி ஒதுங்கச்செய்யும் உணர்வுகளையும் தடைகல்லாக இருக்கும் செயல்களையும் சமாளிக்க பெருந்துணைபுரியும். அவர்களுக்குக் கிடைக்கும் பல்வேறு வகையான தெரிவுகளுக்கிடையில் அறிவுப்பூர்வமான முடிவுகளை எடுக்கும் திறன் வேண்டும். குடிமக்கள் என்ற முறையில், சிங்கப்பூர் தமக்குரியது என்ற

உணர்வை மேம்படுத்தும் பண்புகளை நமது பிள்ளைகள் வளர்த்துக்கொள்ளவேண்டும்; அதோடு நமது தேசத்தின் எதிர்காலத்தின் மீது நம்பிக்கையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

குடியியல் மற்றும் அறநெறிக்கல்வி பாடத்திட்டத்தை வரையும்போது பின்வரும் கூறுகளில் கவனம் செலுத்தப்பட்டது:

- சமூகச்சூழல் மற்றும் பழக்கவழக்கங்களைப் பாதிக்கும் அம்சங்களின் எடுத்துக்காட்டுகள்:
  - துரிதமாக முதுமையடைந்துவரும் மக்கட்தொகை
  - பலவீனமடைந்து வரும் குடும்பப் பிணைப்புகள், தம்பதியர் இருவரும் வேலைக்குச் சென்று பொருள் ஈட்டும் குடும்பங்கள் மற்றும் அதிகமான மணவிலக்கு விகிதங்கள்
  - உலகமயமாதல்
  - போட்டித்தன்மை மிக்க, அறிவுசார்ந்த பொருளியல் வளர்ச்சியுடன் அடிக்கடி வேலை மாற்ற சூழல், மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு
  - தொழில்நுட்பத்தில் துரித முன்னேற்றம் (எ.கா: தகவல் தொழில்நுட்பமும் உயிரியல் அறிவியலும்)
- தொடக்கநிலைப் படிப்பை முடிக்கும் மாணவர்கள் பின்வரும் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளைப் பெறுவர்:
  - தவற்றிலிருந்து சரியானதை வேறுபடுத்த இயலுதல்
  - பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்களின் நலனை முதலில் வைத்தல்
  - மற்றவர்களுடன் தோழமை கொள்ளுதல்
  - எதையும் துருவி ஆராயும் பண்பு பெற்றிருத்தல்
  - எதையும் சுயமாகச் சிந்திக்கவும் தம் கருத்துகளை வெளியிடவும் அறிதல்
  - செய்யும் பணியில் பெருமிதம் கொள்ளுதல்
  - நற்பண்புகளை உருவாக்கிக் கொள்ளுதல்
  - சிங்கப்பூரை நேசித்தல்
- சமூக மனவுணர்வு சார்ந்த கற்றல் **(SEL)** கட்டமைப்பில் அடங்கியுள்ள திறன்களையும் நெறிகளையும் மாணவர்கள் கற்றுணர வாய்ப்பளித்தல்.
- மாணவர்களின் தேவைகளைப் பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகள் மற்றும் பயிற்றுவிப்புப் பரிசீலனைகள் ஆகியவற்றுடன் இணைத்தல் (எ.கா: மொழிப்பொருத்தம், தலைப்புகளின் தேர்வு, நடவடிக்கைகளின் அமைப்பு,

பாடங்களுக்கிடையிலான ஒப்படைப்புப் பணி மற்றும் மதிப்பீடு).

- தேசத் தொண்டு, தன்னைவிட சமூகத்தை முன்னிலைப்படுத்தும் நிலை, பல்வேறு கலாசாரங்களைப் புரிந்துகொண்டு பாராட்டுதல், குடும்ப ஒருமைப்பாட்டின் முக்கியத்துவம், பெற்றோரைப் பேணும் பொறுப்பு, சமுதாயத்தில் உள்ள முதியவர்களிடத்து மதிப்பும் பரிவும், இளம் தலைமுறையினரைப் பேணுதல், சிக்கனம், விடாமுயற்சி, அதிகாரமுள்ளவர்களை மதித்தல் மற்றும் சமூக ஒழுங்கமைவில் நம்பிக்கை முதலியவற்றைக் கட்டிக்காக்கும் நமது தேசத்தின் தனித்தன்மை வாய்ந்த பல கலாச்சார மரபு ஆகியவற்றை இணைத்தல்.
- பொருளியல் அறிவு, நிதியியல் அறிவு, உயிரியியல் நெறிமுறைகளைக் கல்வித்திட்ட முயற்சிகளுடன் இணைத்தல்.

## குடியியல் மற்றும் அறநெறிக் கல்வியின் இலக்கு

நல்ல குணநலன்களோடு, பரிவுடன் தனக்கும், தன் குடும்பத்திற்கும், பள்ளிக்கும், சமூகத்திற்கும், தேசத்திற்கும் மற்றும் உலகிற்கும் பொறுப்பான வகையில் நடந்துகொள்ளும் பண்புகளை ஊட்டுவதே குடியியல் மற்றும் அறநெறிக் கல்வியின் இலக்காகும். பின்வரும் கேள்விகளுக்குப் பதில் கூற அது முயற்சிக்கிறது. அவை குடியியல் மற்றும் அறநெறிக்கல்வி பற்றிய புரிந்துணர்வு மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்த வழிகாட்டியாக அமையும்:

- நான் யார்?
  - என் பண்புகளும் நம்பிக்கைகளும் என்ன? அவை என்னை நல்ல குணமுடையவனாக ஆக்குகின்றனவா?
  - என் பண்புகளையும் நம்பிக்கைகளையும் நான் எப்படிப் பயன்படுத்துவது?
  - என் இலக்குகள் என்ன? அவை எவ்வளவு அர்த்தமுள்ளவை?
  - எதிர்காலத்திற்கு நான் என்னை எப்படி ஆயத்தப்படுத்திக்கொள்வது?
  - மற்றவர்களுடன் சூழலுக்கேற்ப நான் எப்படித் தொடர்பு கொண்டு உறவாடுவது?

- <u>என் கடமைகள் என்ன, பின்வருவனவற்றில் நான் எப்படிப் பங்காற்றலாம்?</u>
  - என் குடும்பம்
  - என் சமூகம்
  - தேசம்
  - உலகம்


- <u>தேசம் என்ற முறையில் நாம் யார்?</u>
  - நமது தேசிய அடையாளம் என்பது என்ன?
  - நமது நாடு நமக்கு எதைக் குறிக்கிறது?
  - உலகச் சமூகத்தில் நமது பங்கை நாம் எப்படி ஆற்றலாம்?

## பாடத்திட்ட அமைப்பு

### நல்ல பண்புகளை வளர்த்தல்

ஒருவரின் நம்பிக்கைகள், மனப்போக்குகள் நடத்தை ஆகியவை அவரின் சுயப்பண்புகளிலிருந்து உருவாகுபவை என்ற கோட்பாட்டைக் குடியியல் அறநெறிக் கல்வி பாடத்திட்டம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆகவே, மாணவர்களிடையே சிறப்புப் பண்புகளை வளர்க்கும்பொருட்டு நல்ல சுய பண்புகளை அவர்கள் வளர்த்துக்கொள்ளக் கவனம் செலுத்துவது முக்கியமாக அமைகிறது. மாணவர்கள் நல்ல பண்புகளை அறிந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால், முதலில் நல்ல பண்புகள் என்ன என்பதை அவர்கள் அறிந்திருக்கவேண்டும். நல்ல பண்புகளைக் கட்டிக்காக்கவேண்டிய தேவை என்ன என்பதைப் பற்றிச்சிந்தித்து ஒரு புரிந்துணர்வுக்கு வரவேண்டும். மேலும் அப்பண்புகளைச் செயற்படுத்துவதற்கான வாய்ப்புகளும் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும். ஒருவர் அறநெறியுடன் நேர்மையானவராக வளர்வதற்குத் தேவையான அறநெறி அறிதல், அறநெறி உணர்வு, அறநெறிச் செயல்[1] ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்புகளைப் புரிந்துகொள்ளுதல் அவசியம் (படம் 1-ஐ பார்க்கவும்).

[1] Lickona, Thomas. *Educating for Character: How Our Schools Can Teach Respect and Responsibility*. New York: Bantam Books, 1992. 53-62.




படம் 1: அறநெறி அறிதல், அறநெறி உணர்வு, அறநெறி செயல் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு

அறநெறி அறிதல் (Moral Knowing) என்பது எது சரி, நல்லது என்பதை அறிந்துகொள்ளும் அறநெறிப் பகுத்துணரும் திறனைக் குறிப்பிடுகிறது. நல்ல பண்புகள் என்றால் என்ன என்பதை மாணவர்கள் வரையறுக்கவும், நல்ல அறநெறிக் கோட்பாடுகளை உருவாக்கவும், சிறந்த குணம், சரியான நடத்தை என்றால் என்ன என்பதை விளக்கவும் முடியும். அறநெறிப் பகுத்தாய்வு, ஆய்ந்தறியும் சிந்தனை, பொறுப்புமிக்கவகையில் முடிவு எடுத்தல், பிரச்சினையைத் தீர்த்தல் மற்றும் சிறந்த முறையில் மற்றவர்களுடன் தொடர்புகொள்ளுதல் போன்ற திறன்களும் அறநெறி அறிதலின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

அறநெறி உணர்வு (Moral Feeling) என்பது அறநெறியின் உணர்வுசார்ந்த அம்சத்தைக் குறிப்பதுடன் அறநெறி உணர்தலுக்கும் அறநெறி செயலுக்கும் இடையே ஒரு பாலமாகவும்[2] விளங்குகிறது. அது நல்ல பண்புகளைக் கட்டிக்காப்பதில் உள்ள நம்பிக்கையையும் கடப்பாட்டையும் கொண்டுள்ளதோடு, அவற்றிக்கேற்ப செயல்படவும் நம்மைத் தூண்டுகின்றது. மேலும் அறநெறிச்சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது நமது செயல்களின் விளைவுகளையும் மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள உதவுகிறது. சுயசிந்தனைத் திறன்களையும், சுய விழிப்புணர்வையும் பெருமளவில் உருவாக்கி நமது சிந்தனைகளையும் செயல்களையும் தொடர்புபடுத்த உதவுகின்றன.

அறநெறிச் செயல் (Moral Action) என்பது சரியானவற்றைச் செய்வதைக் குறிப்பிடுகிறது. அப்படிச் செய்யும்போது அறநெறி அறிவு மற்றும் உணர்வு அடிப்படையில் நமது முடிவுகளையும் செயல்களையும் மேற்கொள்கிறோம். மேலும்,

[2]Ryan, Kevin and Thomas Lickona. "Character Development: The Challenge and the Model". *Character Development in Schools and Beyond.* Washington, DC: The Council for Research in Values and Philosophy, 1992. 19.

அறநெறிச் செயலில் ஈடுபடும்போது நிலையான நல்ல பழக்கவழக்கங்களையும்[3] வளர்க்க இயலும். நல்ல பண்புகளை நடைமுறைப்படுத்த மாணவர்களுக்குப் பல மாறுபட்ட வாய்ப்புகளை வழங்கவேண்டும். இவ்வாய்ப்புகள் அறநெறி செயலுக்குத் தேவையான திறன்களாகவும், இலக்குகளை உருவாக்குவதாகவும் மனப்போராட்டத் தீர்வுக்குத் தொடர்புடையதாகவும், சமூக நல்லுறவுக்குத் தொடர்புடையதாகவும் அமையும்.


ஒருவரின் நடத்தையும் செயலும் நிலையானவையாகவும் அறநெறிச்சார்ந்தவையாகவும் அமைய வேண்டும். மேலும், அறநெறி அறிதல், அறநெறி உணர்வு ஆகியவற்றில் வேரூன்றி இருக்கும் ஒருவர் முக்கோணத்தின் மையத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவரைப் (படம் 1-ஐ பார்க்கவும்) போல் நல்ல குணமுடையவராக வளர்வார். நமது மாணவர்களின் முறையான நடத்தையை வெளிக்கொணர வேண்டும் என்றால் அவர்கள் சரியான பண்புகள் பெற்றிருப்பதை நாம் உறுதிசெய்ய வேண்டும். ஒருவர் தனக்குள்ளிருந்தே அறநெறிசார்ந்த ஒருவராக வளரவேண்டும் என்பதே முக்கோண மையத்தில் வலியுறுத்தப்படுகிறது. ஒருவர் தம் சொந்த நம்பிக்கைகள் பண்புமுறைகள் அடிப்படையில் செயல்படவேண்டுமே தவிர வெளி ஆட்களின் கட்டாயத்தினாலோ வெகுமதிகளினாலோ செயல்படக்கூடாது. மாறாக, உணர்வுகளின் ஊக்குவிப்புகளின் அடிப்படையில் மாணவர்கள் செயல்பட நாம் அவர்களைப் பேணி வளர்க்க விரும்புகிறோம்.

## பண்புகளை நடைமுறைப்படுத்துதல்

நாம் கற்று, பேணி வளர்த்த நல்ல பண்புகளைப் குடும்பம், பள்ளி, சமூகம், தேசம், உலகம் சார்ந்த வாழ்க்கைச் சூழல்களுக்கேற்ப நடைமுறைப்படுத்தவேண்டும். படம் 2- இல், உள்ளதுபோல், ஒரே மையத்தைக்கொண்டு வெளிப்புறமாகப் பரவிவரும் வட்டங்கள், தன்னைச் சுற்றியுள்ள உலகுடன் தொடர்புகொண்டு பழகும் ஒருவரின் சமூகப் பங்கை வலியுறுத்துகின்றன. ஒருவரின் செயல்களால் அவருக்கும் அவர் குடும்பத்திற்கும், பள்ளிக்கும், சமூகத்திற்கும், தேசத்திற்கும் மற்றும் உலகில் உள்ள மற்றவர்களுக்கும் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றிக் கற்பிக்கப்படும். மாணவர்களின் செயல்கள் அவர்களின் பண்புகளுடன் தொடர்பு கொண்டவை. அதனால், மற்றவர்களின் உணர்வைக்

[3] Ryan, Kevin and Thomas Lickona. “Character Development: The Challenge and the Model”, *Character Development in Schools and Beyond.* (Washington, DC: The Council for Research in Values and Philosophy, 1992. 20.

கருத்தில்கொள்ளும் வகையில் அவர்களது செயல்களின் முடிவுகள் அமையவேண்டும்.




படம் 2: ஒருவரின் சமூக பங்கு

## குறிக்கோள்கள்

நமது மாணவர்களிடையே நல்ல குணநலன்களைப் பேணி வளர்ப்பதே நமது இலக்கு. மாணவர்கள் அறநெறி அறிவு, உணர்வு, செயல் ஆகியவற்றுடன் செயல்பட அதற்குத் தேவையான அறிவு, திறன்கள், மற்றும் மனப்போக்குகள் முதலியவற்றைப் பெற்றிருப்பது அவசியம். குடியியல் மற்றும் அறநெறிக் கல்விக்குத் தேவையான அறநெறி அறிவு, உணர்வு, செயல் ஆகியவற்றின் குறிக்கோள்கள் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ளன:

### அறநெறி அறிதலுக்கான குறிக்கோள்கள்

குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி (தொடக்கநிலை) திட்டத்தின் இறுதியில், மாணவர்கள் பின்வருவனவற்றைச் செய்ய இயலும்:

- எது சரி எது நல்லது என்பதை அறிதல்
- நல்ல அறநெறிக் கோட்பாடுகளை உருவாக்குதல்
- நல்ல அறநெறிசார்ந்த முடிவுகளை எடுக்கும்போது சம்பந்தப்பட்ட கோட்பாடுகளை அறிந்திருத்தல்
- குடும்பத்தின் முக்கியத்துவத்தையும் அதில் அவர்களுக்குள்ள பங்கையும் புரிந்துகொள்ளுதல்
- அறநெறிசார்ந்த முடிவுகளை எடுக்கும்போது பல்வேறு சிந்தனைப்போக்குகளைக் கருத்தில் கொள்ளுதல்
- மற்றவர்களின் கருத்துகளைக் கவனத்தில் கொள்ளும்போது திறந்த மனதுடனும் அவர்களைவிடத் தான் சிறந்தவர் என்ற நினைப்பு இல்லாமலும் இருத்தல்

– முடிவுகளை எடுக்கும்போது அறநெறி அறிவுடன் துருவிப்பார்க்கும் சிந்தனையைக் கடைப்பிடித்தல்
– சமூகப் பிணைப்பைக் கட்டிக்காப்பதன் தேவையையும் இன, சமய நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தையும் புரிந்துகொள்ளுதல்
– *நம் பொதுப் பண்புகள்* மற்றும் *சிங்கப்பூர்க் குடும்பப் பண்புகள்* உட்பட நமது தேசத்தின் நலனுக்கு அத்தியாவசியமான பண்புகளை அறிந்துகொள்ளுதல்
– சமூகம், நாடு, உலகம் ஆகியவற்றில் அவர்களுக்குள்ள பங்கை அறிந்துகொள்ளுதல்

## அறநெறி உணர்வுகளுக்கான குறிக்கோள்கள்

குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி (தொடக்கநிலை) திட்டத்தின் இறுதியில், மாணவர்கள் பின்வருவனவற்றைச் செய்ய இயலும்:

– அறநெறிப் பண்புகளில் நம்பிக்கையும் கடப்பாடும் கொண்டு அவற்றைக் கடைப்பிடித்து நடைமுறைப் படுத்துதல்
– தம் உணர்வுகளையும் பண்புகளையும் செயல்களையும் தெளிவாகப் புரிந்துகொண்டு அறநெறிசார்ந்த முடிவை எடுத்தல்
– அறநெறிசார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது மற்றவர்களின் உணர்வுகளைக் கருத்தில் கொள்ளுதல்
– தனக்குள்ளே உள்ள திறன்களை வளர்த்துக்கொள்ளுதல், எ.கா: தங்கள் சிந்தனைகளை மீள்நோக்குதல்

## அறநெறி செயலுக்கான குறிக்கோள்கள்

குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி (தொடக்கநிலை) திட்டத்தின் இறுதியில், மாணவர்கள் பின்வருவனவற்றைச் செய்ய இயலும்:

– தங்களின் முடிவுகளையும் செயல்களையும் செய்யும்போது அறநெறி அறிதல் மற்றும் அறநெறி உணர்வை அடிப்படையாகக் கொண்டிருத்தல்
– நற்பண்புகளை நடைமுறைப்படுத்துதல்
– அறநெறி செயல்களில் தொடர்ந்து ஈடுபடுதல் மூலம் நல்ல பழக்கங்களை வளர்த்துக்கொள்ளுதல்
– நல்ல சமூகத் தொடர்புத் திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்

– தங்களின் செயல்களில் பொறுப்பாக நடந்துகொள்ளுதல்
– பல இன, சமய சமுதாயத்தில் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் வளர்த்துக்கொள்ளுதல்

## பண்புகள்

குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி, ஆறு முக்கிய பண்புகளான மதிப்பு, பொறுப்புணர்வு, நேர்மை, பரிவு, மீளும்தன்மை, நல்லிணக்கம் போன்றவற்றில் கவனம் செலுத்துகிறது. இவை நல்ல பண்புகள் உருவாவதற்கான அடித்தளத்தை வழங்குகின்றன. இந்தப் பண்புகள், நம் பொதுப் பண்புகள், சிங்கப்பூர்க் குடும்பப் பண்புகள், சிங்கப்பூர் 21 இலக்கு மற்றும் தேசிய கல்வி செய்திகள் ஆகியவற்றுக்கு இணையாகவும் உறுதுணையாகவும் விளங்குகின்றன. எது சரி, எது தவறு என்பதை அறிந்துகொள்ள அவை மாணவர்களுக்கு வழிகாட்டுகின்றன. பொறுப்புமிக்க தெரிவுகளைச் செய்ய உதவுவதோடு சமுதாயத்தில் அவர்களுக்குள்ள பங்கு பற்றி மேலும் நன்கு அறிந்துகொள்ளவும் உதவுகின்றன. இந்த ஆறு முக்கிய பண்புகளுடன் மாற்றியமைத்துக்கொள்ளும் தன்மை, தொழில்முனைப்பாற்றல், மற்றும் புத்தாக்கச் சிந்தனைகள், முதலிய பண்புகளும் கற்பிக்கப்படும். இவை மாணவர்களின் புரிந்துணர்வை மேலும் செம்மைப்படுத்தி உறுதிப்படுத்தும்.

அந்த ஆறு முக்கிய பண்புகளின் வரையறை பின்வருமாறு:

### மதிப்பு *(Respect)*

தன் சுயமதிப்பிலும் மற்றவரிடம் உள்ளார்ந்திருக்கும் மதிப்பிலும் ஒருவர் நம்பிக்கைகொள்ளும்போது அவர் மதிப்பை வெளிக்காட்டுவர்.

### பொறுப்புணர்வு *(Responsibility)*

பொறுப்புணர்வு மிக்க ஒருவர், தான், தன் குடும்பம், சமூகம், நாடு, உலகம் ஆகியவற்றோடு தனக்குள்ள கடமையை அறிந்துகொள்வார். அவர் அவற்றை ஏற்றுக்கொண்டு தமது பொறுப்புகளை நேசத்துடனும் கடப்பாட்டுடனும் நிறைவேற்றுவார்.

### நேர்மை *(Integrity)*

நேர்மையான ஒருவர் நெறிசார்ந்த கொள்கைகளைப் பின்பற்றுவதுடன் சரி என்று கருதுவதைத் துணிவுடன் தற்காத்துக் கூறுவார்.

### பரிவு *(Care)*

பரிவுமிக்க ஒருவர் கனிவு மற்றும் கருணையுணர்வுடன் செயல்படுவார். சமூகம் மற்றும் உலகின் நலனுக்காக அவர் தம் பங்கை அளிப்பார்.

### மீளும்தன்மை *(Resilience)*

மீளும்தன்மையுடைய ஒருவரிடம் உணர்வுப்பூர்வ வலிமை இருப்பதுடன் சவால்களை விடாமுயற்சியுடன் எதிர்கொள்ளும் பண்பும் இருக்கும். அவர் துணிவு, நம்பிக்கை, சூழலுக்கு மாற்றியமைத்துக்கொள்ளும் தன்மை, எந்த நிலைமையையும் செயல்திறன்களுடன் கையாளும் தன்மை உடையவராக இருப்பார்.

### நல்லிணக்கம் *(Harmony)*

நல்லிணக்கத்தை மதிக்கும் ஒருவர், நல்ல உறவுகளைக் கடைப்பிடிப்பதுடன் சமூக ஒருமைப்பாட்டையும் மேம்படுத்துவார். பல இன கலாச்சார சமுதாயத்தின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் உணர்ந்து பாராட்டுவார்.

## சமூக, மனவுணர்வுச் சார்ந்த கற்றல் **(Social and Emotional Learning - SEL)**

சமூக, மனவுணர்வு சார்ந்த கற்றல் (SEL) என்பது உணர்வுகளை அடையாளங்கண்டு அவற்றைச் சமாளித்தல், மற்றவர்கள் மீது பரிவு மற்றும் அக்கறை காட்டுதலை வளர்த்துக்கொள்ளுதல், பொறுப்புமிக்க வகையில் முடிவுகளைச் செய்தல், ஆக்ககரமான உறவுகளை அமைத்துக்கொள்ளுதல், சவால்மிக்க நிலைமைகளைப் பயன்மிக்க வகையில் கையாளுதல் போன்ற திறன்களைப் பெறுதல் ஆகும்.

சமூக, மனவுணர்வுத் திறன்கள் பின்வருமாறு:

### சுய விழிப்புணர்வு *(Self Awareness)*

வலிமைகள், மனச்சார்புகள் மற்றும் பலவீனங்கள் குறித்துத் தெளிவான தன்னறிவுகொண்ட மாணவர்கள், தன் மதிப்பு, தன் ஆற்றல், ஆக்ககரமான தன் கருத்து, ஆகியவற்றை வளர்த்துக்கொள்வார்கள். ஒருவர் தனது உணர்வுகள் மற்றும் நடத்தையை அறிந்திருந்தால் அவரது நடத்தையை நிர்வகித்துச் சமாளிக்க இயலும்.

### <u>சுய நிர்வாகம்</u> *(Self Management)*

சுய நிர்வாகத்திறன் பெறும் மாணவர்கள் தங்களின் உணர்ச்சிகளைச் சமாளித்தல், தம் கட்டொழுங்கைச் செயல்படுத்துதல், தம் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல், திட்டமிட்டுச் செயல்படும் திறன்களை வளர்த்துக்கொள்ளுதல் மூலம் தம்மை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

### <u>சமூக விழிப்புணர்வு</u> *(Social Awareness)*

மற்றவர்களின் தேவைகள், பண்புகள், வலிமைகள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றை அறிந்திருக்கும் மாணவர்கள், மற்றவர்கள்மீது உள்ளார்ந்த புரிந்துணர்வையும் மதிப்பையும் வளர்த்துக்கொள்கின்றனர். மற்றவர்களின் உணர்வுகளையும் கனவுகளையும் அறிந்திருப்பதால் அவர்களின் வேறுபாடுகளை உணர்வுப்பூர்வமாக அறிந்து போற்றிப்பாராட்ட மாணவர்களால் இயலும். ஆகவே, மற்றவர்களுடன் நல்ல உறவுமுறையை வளர்த்துக்கொள்ள சமூகத்தைப்பற்றி அறிந்திருத்தல் அடிப்படைத் தேவையாக உள்ளது.

### <u>உறவுகளை நிர்வகித்தல்</u> *(Relationship Management)*

ஒருவரின் சமூக நலனை வளர்த்துக்கொள்ள பயன்மிக்க உறவு நிர்வாகத் திறன்கள் அத்தியாவசியமாகின்றன. அவற்றில், பயன்மிக்க பேச்சுத் தொடர்பு, சமூக ஈடுபாடு, உறவுகளை உருவாக்கிக் கட்டிக்காத்தல், மற்றவர்களுடன் ஒத்துழைத்துப் பணியாற்றுதல், முரண்பட்ட கருத்துகளின் போது பேச்சுவார்த்தை நடத்திச் சமாளித்தலும் அடங்கும்.

### <u>பொறுப்புடன் முடிவெடுத்தல்</u> *(Responsible Decision Making)*

தனிமனிதர் மற்றும் சமூக நலனுக்குப் பொறுப்பான வகையில் முடிவெடுத்தல் அத்தியாவசியமாகிறது. இதற்கு எல்லாத் தகவல்களையும் அறிந்து பொறுப்புடன் முடிவெடுக்கவும் அந்த முடிவுகளைத் தனிமனிதர், சமூக, அறநெறி, தார்மீக உணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யவும் சிந்தனைத் திறன்கள் தேவைப்படும். அத்தகைய முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதுடன் அவற்றை உறுதியான நிலையில் மேற்கொள்வதற்குத் துணிவும் திடநம்பிக்கையும் வேண்டும்.

பண்புகளைக் கற்றுக்கொடுத்தலுக்குச் சமூக மனவுணர்வுத் திறன்களைக் கற்றுக்கொடுத்தல் முறை உறுதுணையாக இருப்பதுடன், ஒவ்வொரு பண்புக்கூறுகளையும் நடைமுறையில் செயல்படுத்தவும் உதவுகிறது.

# குடியியல் மற்றும் அறநெறிக் கல்வியைக் கற்பித்தல்

## கற்பித்தல் அணுகுமுறைகள்

குடியியல் மற்றும் அறநெறிக் கல்வியைக் கற்பித்தலில், பொருளடக்கம் அடிப்படையில் அமைந்த அணுகுமுறையைவிட செய்முறை அடிப்படையில் அமைந்த அணுகுமுறையே விரும்பப்படுகிறது. பொருளடக்கம் அடிப்படையில் அமைந்த அணுகுமுறைகள், கருத்துக்கள் மற்றும் தகவல்களைக் கற்பதில் கவனம் செலுத்துவதுடன் பெருமளவில் ஆசிரியரை மையமாகக் கொண்டுள்ளது. செய்முறை அணுகுமுறைகள் மாணவர்களை மையமாகக் கொண்டுள்ளதுடன் "ஏன்" என்பதற்குப் பதிலாக "எதற்கு" "எப்படி" என்பதில் கவனம் செலுத்தும். திறன்களைக் கற்றுக்கொள்ள வகை செய்தலையும் செயல்முறை வழி பண்புகளை உள்ளார்ந்தவர்களாக்குதலையும் அவை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்த அணுகுமுறைகள் சாத்தியமான வகையில் ஒன்றோடு ஒன்று இணைத்துப் பயன்படுத்தப்பட வேண்டும்.

- பண்பாடு புகட்டும் அணுகுமுறை (Cultural Transmission Approach)

நமது சமுதாயத்தில் கட்டிக்காக்கப்படும் விரும்பத்தகுந்த பண்புகளையும் நமது கலாசார மரபில் முக்கியமானவையாக விளங்குபவற்றையும் பண்பாடு புகட்டும் அணுகுமுறை வலியுறுத்துகிறது. முன்னுதாரணமாக உள்ளவர்களை எடுத்துக்காட்டியும், பண்பாட்டுப் பழக்கவழக்கங்களைப் பகிர்ந்து கொள்வதன்மூலமும், கட்டொழுங்கைக் கடைப்பிடித்தல் மூலமும் இந்தப் பண்புகள் மாணவர்களுக்குப் புகட்டப்படுகின்றன. மாணவர்களிடையே ஆக்கப்பூர்வமான தார்மீக நெறிகளை வளர்க்கும் பள்ளிக் கலாசாரத்தை மேம்படுத்தி அதற்கு வகைசெய்வதையும் பண்பாடு புகட்டும் அணுகுமுறை குறிக்கிறது. எண்ணத் திரையில் நிழலாடச் செய்யும் மீள்நோக்கு நடவடிக்கைகள் மூலம் விரும்பத்தக்க பண்புகளை மாணவர்கள் உணர ஆசிரியர்கள் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரலாம்.

- கதைசொல்லுதல் அணுகுமுறை[4] (Narrative Approach)

கதைகள் மற்றும் கதைகளைப் புனைதல் மூலம் மக்கள் உலகையும் தங்களின் அனுபவங்களையும் நன்கு

[4] Vitz, Paul C. "The Use of Stories in Moral Development: New Psychological Rreasons for an Old Education Method". *American Psychologist* 45: 709 – 720. 1990

புரிந்துகொள்கிறார்கள் என்னும் அடிப்படையில் அமைந்தது கதைசொல்லுதல் அணுகுமுறை. ஆகவே, கதை சொல்லி எண்ணங்களை மீள்நோக்கச் செய்யும் முறை மூலம் மாணவர்கள் தங்களின் பண்பாடுகளை அடையாளங் கண்டுகொண்டு விளக்கம் பெறுகின்றனர். மாணவர்கள் தங்களின் சொந்த அனுபவங்களை எடுத்துக்கூறுதல், சொந்த கதைகளை உருவாக்குதல், மற்றொருவரின் கதையைக் கேட்டல் ஆகியவற்றின் மூலம் தங்கள் சொந்த நம்பிக்கைகளையும் பண்புகளையும் அடையாளங்காண்பர். மேலும், சுயவிடை கேள்விகள் கேட்டல், சுருக்கிக்கூறுதல், ஒவ்வொருவரின் பங்களிப்பையும் வலுப்படுத்துதல், ஒருவர்க்கொருவர் கருத்துரைத்தலை ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கைகள் இந்த அணுகுமுறையின்போது பயன்படுத்தப்படும்.

- <u>பிறர்நலன் கருதும் அணுகுமுறை (Consideration Approach)</u>

மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்தலில் கவனம் செலுத்தி ஒரு பரிவுமிக்க ஆளுமையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது பிறர்நலன் கருதும் அணுகுமுறை. இந்த அணுகுமுறையில் கேட்கப்படும் அதிமுக்கிய கேள்வி, "இத்தகைய சூழலில் நீங்கள் இருந்தால் அல்லது பிறராக நீங்கள் இருந்தால், உங்களின் உணர்வு எப்படியிருக்கும்?" இதன்மூலம், அறநெறிசார்ந்த முடிவை எடுக்கும்போது அந்த முடிவு பிறர் மீது ஏற்படுத்தும் தாக்கத்தையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை ஒரு மாணவன் கற்றுக்கொள்கிறான். பிறரின் உள்ளப்போக்கைப் பின்பற்றுவதன் மூலம், அந்த நபரின் சிந்தனைகளையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ள மாணவர் முயற்சிப்பதோடு, நிலைமைக்கேற்ப சீரான கருத்தையும் உருவாக்கிக்கொள்கிறார்.

- <u>மாற்றம் செய்யப்பட்ட நன்னெறி துலக்கும் அணுகுமுறை (Modified Values Clarification Approach)</u>

பகுத்தறியும் சிந்தனை, உணர்ச்சி வெளிப்பாடு இரண்டையும் பயன்படுத்தித் தங்களின் சொந்த உணர்வுகள் மற்றும் நடந்துகொள்ளும் முறை ஆகியவைத் தொடர்பான பண்புகள் குறித்து விளக்கம் பெற மாணவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்ட நன்னெறி விளக்க அணுகுமுறை உதவுகிறது. சமுதாயம் கட்டிக்காக்கும் பண்புகள் உட்பட, உறுதியான பண்பு முறைகளின் அடிப்படையில் மாணவர்கள் முடிவுகளை எடுக்க ஆசிரியர்கள் வழிகாட்டுகின்றனர்.

- <u>பகுத்துணர்ந்துகொள்ளும் திறன் வளர்க்கும் அணுகுமுறை (Cognitive Development Approach)</u>

கோல்பர்க்கின் (Kohlberg) அறநெறி வளர்ச்சிக்கோட்பாட்டை[5] அடிப்படையாகக் கொண்ட பகுத்துணர்ந்துகொள்ளும் திறனை வளர்க்கும் அணுகுமுறை, அறநெறி பகுத்தாய்வு முறையைப் பயன்படுத்துகிறது. தன்னை மையமாகக் கொண்ட தள்ளப்போக்கிலிருந்து, சமூக மற்றும் உலக உள்ளப்போக்கில் கவனம் செலுத்தி முன்னேற இந்த முறை மாணவர்களுக்கு உதவுகிறது.

- <u>செயல்முறை கற்றல் அணுகுமுறை [6] (Action Learning Approach)</u>

செயல் முறை கற்றல் அணுகுமுறை அனுபவம் வழி கற்பிப்பதில் கவனம் செலுத்துகிறது. பள்ளியிலும் சமூகத்திலும் ஒப்படைப்புத் திட்டங்களில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். உண்மை உலகச் சூழலில் தாங்கள் கற்றுக்கொண்ட திறன்கள், பெற்ற அறிவு ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் வழி மாணவர்கள் பண்புகளை உள்ளார்ந்தவைகளாகத் தங்களை ஆக்கிக்கொள்ள இந்த அணுகுமுறை உதவுகிறது. தங்களின் பண்பு முறைகள் குறித்து மனதில் மீள்நோக்கி மதிப்பிட்டு, முடிவுகளைச் செய்வதுடன் அத்தகைய பண்புகளை மற்றவர்களுக்கும் தெரிவிக்கின்றனர்.

## கற்பித்தல் உத்திமுறைகள்

குடியியல் மற்றும் அறநெறிக் கல்விப் பாடங்களில், மாணவர்கள் ஒத்துழைத்துக் கற்றல், ஒட்டுமொத்த மூளை செயல்பாட்டு முறைவழி கற்றல் மற்றும் பட்டறிவு வழி கற்றல் போன்றவற்றை ஒருங்கிணைக்கும் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்துமாறு ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இவை, பாடங்களின் உள்ளடக்க அறிவையும் திறன்களையும் மாணவர்கள் பெற உதவுவதுடன், மற்றவர்களுடன் ஒத்துழைத்துப் பணியாற்றவும், புத்தாக்கம் மற்றும் திறனாய்வு சிந்தனையில் ஈடுபடவும், உண்மையான வாழ்க்கைச் சூழலில் கற்றுக்கொண்டவற்றை அவர்களின் மேம்பாட்டிலும் வளர்ச்சியிலும் பயன்படுத்தவும் உதவும். இந்த உத்திமுறைகளைப் செயற்படுத்தும்போது, மாணவர்களின் வெவ்வேறான கற்றுக்கொள்ளும் பாணி, ஆர்வம் மற்றும் முதிர்ச்சி நிலை ஆகியவற்றையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

[5] Kohlberg, L. “The child as a moral philosopher”. *Psychology Today*. 1968. 25 – 30
[6] Revans, R. *ABC of Action Learning.* London: Lemos & Crane, 1998.

# நடைமுறைப்படுத்துதல்

## ஒட்டுமொத்தப் பள்ளி அணுகுமுறை (Whole - School Approach)

சிறப்பான அறநெறிக் கல்விக்கு ஒட்டுமொத்தப் பள்ளி அணுகுமுறை தேவைப்படுகிறது. குடியியல் மற்றும் அறநெறிக் கல்வியை முறையாகக் கற்றுக்கொடுத்தலுக்கும் மேலாக, பட்டறிவு வழி கற்றலுக்கான வாய்ப்புகளைப் பரவலான பள்ளிப் பாடத்திட்டங்கள் வழங்குகின்றன. அதன்மூலம் கற்றுக்கொடுக்கப்பட்ட பண்புகளை மாணவர்கள் மனதில் பதிய வைத்துக்கொள்வதுடன் அவற்றைச் செயல்படுத்தவும் முடியும். மேலும், மாணவர்களின் அறநெறி சார்ந்த வளர்ச்சியில் அவர்களுக்கு வழிகாட்டுவதில் பள்ளி நிர்வாகமும் ஆசிரியர்களும் முக்கிய பங்காற்றுகின்றனர்.

- சமூக ஈடுபாடு திட்டம் (Community Involvement Programme - CIP)

சமூக ஈடுபாடு திட்டம், பள்ளிப் பாடத்திட்டத்திலும் மற்ற நடவடிக்கைகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வோர் கல்வி ஆண்டிலும் குறைந்தது 6 மணி நேரமாவது சமூகத்திற்கு ஆக்கப்பூர்வமாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாணவர்கள் பங்காற்ற வேண்டும் என இத்திட்டம் வலியுறுத்துகிறது. பொறுப்புமிக்க குடிமக்களாகவும் எதிர்காலத் தலைவர்களாகவும் ஆக குணநலன், திறமை மற்றும் கடப்பாடு ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள இத்திட்டம் மாணவர்களுக்குப் பட்டறிவு வழி கற்கும் வாய்ப்புகளை வழங்குகிறது. மேலும் தொண்டூழிய உணர்வைப் பேணி வளர்க்கவும் உதவுகிறது.

- சேவை வழி கற்றல் (Service - Learning - S-L)

சேவை வழி கற்றல் என்பது கற்பித்தல் கற்றல் அணுகுமுறையாகும். இது சமூக ஈடுபாட்டைப் பயன்படுத்தி வளமான கற்றல் சூழலை உருவாக்குகிறது. கற்றல் விளைவுகளுக்கும் அதாவது சேவை மற்றும் பாட இலக்குகளுக்கும் சமூக ஈடுபாடு அனுபவத்திற்கும் இடையே தெளிவான தொடர்புகளைச் சமூக ஈடுபாடு திட்டம் ஏற்படுத்துகிறது. சேவையில் மாணவர்களை ஈடுபடுத்தவேண்டும் என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட அமைப்புரீதியிலான அணுகுமுறை இது. மேலும் இது, சமூகத்தின் உண்மையான தேவைகளை நிறைவேற்றுகிறது. பள்ளிப் பாடத்திட்டத்துடன் மாணவர்களின் சேவை அனுபவங்களைத் தொடர்புபடுத்திக் கற்றல் விளைவுகளை அடையாளங்காணுகிறது. சேவைப் பணிகளுக்கு மாணவர்களை

உள்ளரீதியாகவும் உடல்ரீதியாகவும் தயார்ப்படுத்துவதோடு மாணவர்கள் தங்கள் சிந்தனைகளை மீள்நோக்கவும் இவ்வமைப்பு முறை உதவுகிறது.

- மற்ற திட்டங்களும் நடவடிக்கைகளும் (Other Programmes and Activities)

அறநெறிக் கல்வியில், முழுப்பள்ளிசார்ந்த அணுகுமுறைக்குப் பங்காற்றும் சில திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளில் இவையும் அடங்கும்:

– துணைப் பாடத்திட்ட நடவடிக்கைகள்
– ஆசிரியர்கள் உதவி வழங்கும் கவனிப்பு முறையும் வாழ்க்கைத்தொழில் வழிகாட்டலும்
– பாலியல் கல்வி
– தேசியக் கல்வி

- பாடத்திட்டங்களுக்கிடையிலான தொடர்புகள் (Cross Curricular Links)

குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி கற்பித்தலில், கற்றலை மேலும் அர்த்தமுள்ளதாக்க மற்ற பாடங்கள் மற்றும் திட்டங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது சிறப்பு. அறிவுத்துறைகளுக்கிடையே மாணவர்கள் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதுடன் புதிய அறிவாற்றல்களையும் உருவாக்கிக்கொள்வர். குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி மூலம் பெற்ற பண்புகளைத் தாங்கள் கற்கும் மற்ற துறைகளில் செயற்படுத்த மாணவர்கள் அறிவர். அதனால், பாடத்திட்டங்களுக்கிடையிலான தொடர்புகளைப் பயன்படுத்துவது மாணவர்களின் அறநெறி சார்ந்த வளர்ச்சியையும் புத்தாக்கத்திறனையும் மேம்படுத்துகிறது.

## கால அட்டவணை

2006-ஆம் ஆண்டில், இந்தப் பாடத்திட்டம், தொடக்கநிலை 1-இலும் தொடக்கநிலை 2-இலும் நடைமுறைப்படுத்தப்படும். கட்டம் கட்டமாகப் பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்படுவதற்கான கால அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| நிலை | நடைமுறைப்படுத்தும் ஆண்டு |
|---|---|
| தொடக்கநிலை 1-2 | 2007 |
| தொடக்கநிலை 3-4 | 2008 |
| தொடக்கநிலை 5-6 | 2009 |

## பயிற்று மொழி

அதிகாரப்பூர்வ தாய் மொழிகளான மலாய், சீனம், மற்றும் தமிழ் ஆகியவற்றில் பாடங்கள் நடத்தப்படும்.

## பாட வேளை

குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி கீழ்த் தொடக்கநிலையில் (தொடக்கநிலை 1 முதல் 3 வரை) இரண்டு பாடவேளைகளிலும் மேல்தொடக்கநிலையில் (தொடக்கநிலை 4 முதல் 6 வரை) மூன்று பாடவேளைகளிலும் கற்றுக்கொடுக்கப்படும்.

## கற்பித்தலுக்குரிய பயிற்றுக்கருவிகள்/துணைகள்

குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி கற்றல் கற்பித்தலுக்கான பயிற்றுக்கருவிகள் கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவினால் தயாரிக்கப்படுகின்றன. ஆசிரியர்க்கான அச்சடிக்கப்பட்ட பயிற்றுக்கருவிகளுடன் தகவல்தொழில்நுட்ப பயிற்றுக்கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன. மேலும் மாணவர்களுக்கு, மாணவர் புத்தகங்களுடன் சுயமாக இயக்கும் தகவல்தொழில்நுட்ப கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அர்த்தமுள்ள, கவனத்தை ஈர்க்கக்கூடிய பாடங்களை நடத்த ஊக்குவிக்கப்படுகின்றனர்.

கல்வி அமைச்சின் இதர பிரிவுகள், மற்ற அமைச்சுகள், சிங்கப்பூர் மீடியா கார்ப்பரேசன் நிறுவனம், சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம், ஆகியவைத் தயாரித்த பொருத்தமான பயிற்றுக்கருவிகளையும் ஆசிரியர்கள் பயன்படுத்தலாம்.

## மதிப்பீடு

குடியியல் மற்றும் அறநெறிக் கல்வியின் மதிப்பீடு சிக்கல் மிக்க ஒன்று. அது பண்புகளை மற்றவர்களுக்கு ஊட்டுவதிலும் கற்பிப்பதிலும் கவனம் செலுத்துவதால் அவ்வாறு கருதப்படுகிறது. பண்புகள் மற்றும் அறநெறிசார்ந்த கொள்கைகள் குறித்து மாணவர்கள் காட்டும் புரிந்துணர்வு, அறநெறி பகுத்தாய்வு, பொறுப்புமிக்கவகையில் முடிவுகளை எடுத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகியவைக் குறித்து மாணவர்கள் மதிப்பிடப்படுவார்கள். மதிப்பீடு பரவலான அடிப்படையிலும், பலபரிமாணங்களைக் கொண்டதாகவும் இருப்பதுடன், மாணவர்களின் வளர்ச்சித் தேவைகளுக்கும் நிலைகளுக்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மாணவர்களின் நற்பண்பு வளர்ச்சியில் குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி கவனம் செலுத்துவதால், முறைசாரா மதிப்பீடு வலியுறுத்தப்பட வேண்டும்.

## முறைசாரா மதிப்பீடு (Formative Assessment)

மாணவர்கள் படிப்படியாகக் கற்பதில் முறைசாரா மதிப்பீடு கவனம் செலுத்துகிறது. மாணவர்களின் கற்றல் முறையில் அல்லது சுயசிந்தனை ஈடுபாட்டில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கருத்துகளை வழங்கும்போது முறைசாரா மதிப்பீடு நிகழும். இதை வாய்மொழிக் கருத்து, கட்டளைவிதிமுறை மற்றும் சரிபார்க்கும் பட்டியல் மூலம் செயல்படுத்தலாம். நுணுக்கமான மற்றும் சவால்மிக்க பிரச்சினைகளை விவாதிக்க தொடர்த்து வாய்ப்புகளை வழங்கி மாணவர்களை ஈடுபடுத்தும் அடிப்படையில் முறைசாரா மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். மதிப்பீட்டிற்கும் கற்றலுக்கும் இடையே உள்ள தொடர்பை இது மேம்படுத்தும்.

முறைசாரா மதிப்பீடு பின்வருவனவற்றுக்குப் பயன்படும்:

- கற்றலில் மாணவர்களின் வலிமைகளையும் பலவீனங்களையும் அடையாளங்காணுதல்;
- ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் காலத்தோடு கருத்துக்கணிப்பு வழங்குதல்;
- மாணவரின் தன்னிச்சையான கற்றலை ஊக்குவித்தலும் எதிர்காலச் செயல்பாட்டை மேம்படுத்தலும்;
- மாணவரின் சுயவிழிப்புணர்வை வளர்ப்பதில் உதவுதல்.

முறைசாரா மதிப்பீட்டிற்கான சில பொருத்தமான முறைகள்:

- மாணவர் படைப்பு தொகுப்பை மதிப்பிடுதல்
- குறிப்பேடு எழுதுதல்
- மாணவர்களின் சுய மீள்நோக்கு
- நிகராளர், மற்றும் சுய மதிப்பீடு
- பாத்திரமேற்று நடித்தல்
- ஒப்படைப்பு
- சேவைவழி-கற்றல் பணிகள்

# மதிப்பு

தன் சுயமதிப்பிலும் மற்றும் எல்லோரிடமும் உள்ளார்ந்திருக்கும் மதிப்பிலும் ஒருவர் நம்பிக்கைகொள்ளும்போது அவர் மதிப்பை வெளிக்காட்டுவார்.

# மதிப்பு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. தன்னைப் பற்றி அறிந்துகொள்ளுதல் | மாணவர்கள் பின்வரும் திறனைப் பெற்றிருப்பர்:<br><br>• தங்களைப் பற்றி அறிந்துகொண்டு பாராட்டுவர் | • என்னைப் பற்றி நான் எப்படி விவரிப்பேன்?<br>சில வழிகள்:<br>– உடற் கூறுகள்<br>– பொழுதுபோக்குகள்<br><br>• என்னைப் பற்றி எனக்கு எது பிடிக்கும்?<br>அதில் இவை அடங்கும்:<br>– நான் செய்யக் கூடிய செயல்கள்<br>– எனது திறன்கள்/ஆற்றல்கள்<br>– என் வலிமைகளை வளர்த்துக்கொள்ளுதலும் என்னால் ஆன சிறந்தவற்றை வழங்குதலும் | • பரிவு<br>• பொறுப்புணர்வு<br>• தன் கருத்துணர்வு<br>• தன்னம்பிக்கை<br>• தன்மானம்<br>• தன் மதிப்பு<br>• தன் கௌரவம்<br>• ஒவ்வொரு சிங்கப்பூரரும் முக்கியம் (சிங்கப்பூர் 21)<br>• நலமான பண்புகளை உருவாக்கிக்கொள்ளுதல் (DOE)<br>• சுய விழிப்புணர்வு |

# மதிப்பு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 2. மற்றவர்களைப் போற்றிப் பாராட்டுதல் | மாணவர்கள் பின்வரும் திறனைப் பெற்றிருப்பர்<br><br>• மற்றவர்களைப் போற்றிப் பாராட்டுதல் | • <u>நாம் மற்றவர்களைப் போற்றிப் பாராட்டுவது எனக்கு ஏன் முக்கியமாகிறது?</u><br>குடும்பம், பள்ளி, சமூகம் ஆகியவற்றுக்கான எல்லோரின் பங்களிப்பையும் நாம் பாராட்டவேண்டும்.<br><br>• <u>மற்றவர்களை நான் எப்படிப் போற்றிப் பாராட்டுவது?</u><br>அவற்றில் சில வழிகள்:<br>– அவர்களின் பங்களிப்பிற்கு நன்றி கூறுதல்<br>– அவர்களிடம் பரிவும் அக்கறையும் காட்டுதல்<br>– அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு நடத்தல் | • பரிவு<br>• நேர்மை<br>• கருத்திணக்கம், பிணக்கம் அல்ல (நம் பொதுப்பண்புகள்)<br>• நமது பல இன பல சமய நல்லிணக்கம் (நம் பொதுப் பண்புகள்)<br>• ஒருவரையொருவர் மதித்தல் (சிங்கப்பூரக் குடும்பப் பண்புகள்) மற்றவர்களின் நலனை முன்வைத்தல் (DOE)<br>• மற்றவர்களுடன் தோழமை கொள்ளுதல் (DOE)<br>• சமூகப் பிணைப்பு<br>• இன, சமய நல்லிணக்கத்தைக் கடைப்பிடிப்போம் (NE)<br>• சமய நல்லிணக்கப் பிரகடனம்<br>• சமூக விழிப்புணர்வு<br>• உறவுகளை நிர்வகிக்கும் திறன் |

## மதிப்பு
### கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 3. என் பள்ளியைப் பற்றி அறிந்து பாராட்டுதல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• பள்ளியைப்பற்றி அறிந்து பாராட்டுவர்<br><br>• பள்ளியின் எதிர்பார்ப்புக்கு நிகராக வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பர் | • என் பள்ளியைப் பற்றி எனக்கு எது பிடிக்கும்?<br>சில அம்சங்களில் இவையும் அடங்கும்:<br>– பள்ளி உறுப்பினர்கள் எ.கா. தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பள்ளிப் பணியாட்கள், பள்ளிப் பேருந்து ஓட்டுநர்கள்<br>– பள்ளிச் சூழல்<br>– பள்ளிக் கலாசாரம் | • போற்றிப் பாராட்டுதல்<br>• பரிவு<br>• நல்லிணக்கம்<br>• நேர்மை<br>• மரியாதை<br>• சமூகப் பிணைப்பு<br>• சமூக விழிப்புணர்வு |

# மதிப்பு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • <u>நான் எப்படி ஒரு நல்ல மாணவனாக இருப்பது?</u><br>சில வழிகளில் இவையும் அடங்கும்:<br>– பள்ளி விதிமுறைகளைப் பின்பற்றி நடத்தல்<br>– என் பள்ளிச் சீருடையைப் பெருமையுடன் அணிந்துகொள்ளுதல்<br>– பள்ளியின் நற்பெயரைக் கட்டிக்காத்தல்<br>– பள்ளிப் பாடலைப் பெருமையுடன் பாடுதல்<br>– பள்ளிக்கு வெளியே சிறப்பாக நடந்துகொள்ளுதல், எ.கா. சுற்றுலாவின்போதும், பள்ளிப் பேருந்தில் பயணம் செய்யும் வேளையிலும் | |

# மதிப்பு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 4. சிங்கப்பூரை நேசித்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• சிங்கப்பூரைப் போற்றிப்பாராட்டுவர்<br>• நமது நாட்டின் இலக்கியல்களை அறிந்துகொள்வர்<br>• நமது நாட்டின் இலக்கியல்களைக் கண்டுணர்ந்து அவற்றைப் பேணிக் காப்பர் | • சிங்கப்பூரில் நான் நேசிப்பது என்ன?<br>சிங்கப்பூர் என்பது :<br>– துய்மையானது<br>– நிலையானது மற்றும் அமைதியானது<br>– ஒரு பூங்கா நகரம்<br>– பல இன சமுதாயம்<br>• சிங்கப்பூரைப் பற்றி எனக்கு என்ன தெரியும்?<br>சிங்கப்பூரின் பின்வரும் பின்புலங்கள் எனக்குத் தெரியும்:<br>– தேசிய சாதனைகள்<br>– மரபும் கலாசாரமும் | • போற்றிப்பாராட்டுதல்<br>• பரிவு<br>• நல்லிணக்கம்<br>• நேர்மை<br>• பொறுப்புணர்வு<br>• சமூகத்தினும் உயர்ந்தது தேசம்; தம்மினும் உயர்ந்தது சமுதாயம் (நம் பொதுப் பண்புகள்)<br>• சிங்கப்பூர் இதயத்துடிப்பு (சிங்கப்பூர் 21)<br>• சிங்கப்பூரை நேசித்தல் (DOE)<br>• சிங்கப்பூர் நமது தாயகம்; இந்த நாட்டிற்கு உரிமையுடையவர்கள் நாம் (NE)<br>• இன, சமய நல்லிணக்கத்தைக் காட்டிக்காப்போம் (NE)<br>• சமய நல்லிணக்கப் பிரகடனம் |

# மதிப்பு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • சிங்கப்பூர் மீதான மதிப்பை நான் எப்படிக் காட்டுவது?<br>சில வழிமுறைகள்:<br>– பெருமையுடன் நாட்டுப் பண்ணைப் பாடுதல், நாட்டு உறுதிமொழியைக் கூறுதல்<br>– நாட்டின் நற்பெயரைக் கட்டிக்காத்தல், குறிப்பாக நான் வெளிநாட்டில் இருக்கும்போது | |

# மதிப்பு
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. தன் மதிப்பை உருவாக்குதல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• தங்களின் வலிமைகளையும் பலவீனங்களையும் அறிந்துகொள்வர்<br>• தன் மேம்பாட்டிற்கான கடப்பாட்டை வெளிப்படுத்துவர் | • <u>நான் எதில் சிறந்து விளங்குகிறேன்?</u><br>என்னால் சிறந்த வகையில் செய்யக்கூடியவை<br>– என் திறன்கள்<br>– என் வலிமைகள்<br>• <u>நான் எப்படி என்னை மேம்படுத்திக்கொள்ளலாம்?</u><br>என் வலிமைகளைக் கட்டிக்காத்தல் மூலமும் என் பலவீனங்களை அறிந்துகொள்ளுதல் மூலமும் நான் தன்மான உணர்வைப் பெற முடியும். இதனைப் பின்வருவன மூலம் செய்யலாம்:<br>– என் திறன்களைப்பற்றி அறிந்திருத்தல்<br>– என்னை நானே மேம்படுத்திக்கொள்வது எப்படி என்று அறிந்திருத்தல் | • பரிவு<br>• பொறுப்புணர்வு<br>• தன்மானம்<br>• தன் மரியாதை<br>• தன் மதிப்பு<br>• ஒவ்வொரு சிங்கப்பூரரும் முக்கியம் (சிங்கப்பூர் 21)<br>• நலமான பண்புகளை உருவாக்கிக கொள்ளுதல் (DOE)<br>• சுய விழிப்புணர்வு |

# மதிப்பு
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 2. பிறர்நலன் கருதுதல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதலின் தேவையை அறிந்துகொள்வர்<br>• மற்றவர்மீது கூருணர்வு கொண்டிருத்தல் | • மற்றவர்களின் விருப்பு வெறுப்புகளைப்பற்றி நான் ஏன் அறிந்துகொள்ள வேண்டும்?<br>சில காரணங்கள்:<br>– நல்லிணக்கமான உறவுகளை உருவாக்க<br>– மற்றவர்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெற<br>– அவர்கள் யாராக இருக்கிறார்களோ அதற்காக அவர்களைப் பாராட்டுதல் | • பரிவு<br>• நல்லிணக்கம்<br>• கருத்திணக்கம், பிணக்கம் அல்ல (நம் பொதுப் பண்புகள்)<br>• சமூகப் பிணைப்பு<br>• நமது பல இன சமய நல்லிணக்கம் (நம் பொதுப் பண்புகள்)<br>• ஒருவரையொருவர் மதித்தல் (சிங்கப்பூர் குடும்பப் பண்புகள்)<br>• பகிர்ந்துகொள்ளுதல் மற்றவர்களின் நலனை முதலில் வைத்தல் (DOE)<br>• மற்றவர்களுடன் தோழமை கொள்ளுதல் (DOE) |

## மதிப்பு
### மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • <u>பிறர் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் கூருணர்வுகளைப் புரிந்துகொண்டு மற்றவர்களை எப்படி நான் நடத்துவது?</u><br>சில வழிகள்:<br>– மற்றவர்களிடம் பணிவன்புடன் நடந்துகொள்ளுதல்<br>– மற்றவர்களிடம் பொறுமையாக இருத்தல்<br>– மற்றவர்களின் உணர்வுகளை அறிந்திருத்தல்<br>– மற்றவர்களின் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு முன் அவர்களிடம் அனுமதி கேட்டல் | • இன, சமய நல்லிணக்கத்தைக் கட்டிக்காப்போம் (NE)<br>• சமய நல்லிணக்கப் பிரகடனம்<br>• சமூக விழிப்புணர்வு<br>• உறவுகளை நிர்வகிக்கும் திறன் |

## மதிப்பு
### மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 3. தன் பள்ளிக்குப் பெருமை சேர்த்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• பள்ளியின் இலக்கியல்களையும் இலட்சிய நோக்கையும் புரிந்துகொள்வர்<br><br>• பள்ளியின் இலக்கியல்களுக்கு ஏற்ப நடந்துகொள்வர்<br><br>• பள்ளியின் இலட்சிய நோக்கை அடைவர் | • என் பள்ளி என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறது?<br>என்னிடமிருந்து பள்ளி எதிர்பார்ப்பவைகளில் சில:<br>– சிறந்த பொறுப்புமிக்க மாணவராக இருத்தல்<br>– சிறந்த பொறுப்புமிக்க குடிமகனாக இருத்தல்<br>– எப்போதும் சிறப்பாக நடந்துகொள்ளுதல் | • போற்றிப் பாராட்டுதல்<br>• பரிவு<br>• நல்லிணக்கம்<br>• நேர்மை |

# மதிப்பு
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • என் பள்ளியின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நான் எப்படி வாழ்ந்து காட்டுவது?<br>என் பள்ளியின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நான் வாழ்ந்துகாட்டுவதற்கான சில வழிகள்:<br>– பள்ளியின் இலக்கியல்களையும் இலட்சிய நோக்கையும் அறிந்திருத்தல்<br>– பள்ளியின் இலக்கியல்களையும் இலட்சிய நோக்கையும் அடைவதில் பள்ளியின் இதர உறுப்பினர்களுடன் கூட்டாகப் பணியாற்றுதல் | |

# மதிப்பு
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 4. தன் நாட்டிற்குப் பெருமை சேர்த்தல் | மாணவர்கள் பின்வரும் திறனைப் பெற்றிருப்பர் :<br>• நமது நாட்டின் இலக்கியல்புகளைக் கட்டிக்காப்பதுடன் அவற்றை அடைவதில் கடப்பாடும் கொண்டிருப்பர் | • <u>நாடு என்னைப் பற்றிப் பெருமைகொள்ள நான் என்ன செய்யலாம்?</u><br>அவற்றில் சில வழிகள்:<br>– நமது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்க நமது வலிமைகளையும் திறன்களையும் பயன்படுத்துதல்<br>– மற்ற குடிமக்களையும் மதித்து அவர்களின் நம்பிக்கைகள், கலாசாரங்கள் மற்றும் சமயங்களையும் அறிந்து பாராட்டுதல்<br>– நாட்டு நிர்மாணத்திற்குப் பங்களிக்கும்பொருட்டு மற்ற குடிமக்களுடன் பணியாற்றுதல் | • போற்றிப்பாராட்டுதல்<br>• பரிவு<br>• நல்லிணக்கம்<br>• நேர்மை<br>• பொறுப்புணர்வு<br>• சமூகப் பிணைப்பு<br>• சிங்கப்பூரின் இதயத் துடிப்பு (சிங்கப்பூர் 21)<br>• சுறுசுறுப்புமிக்க குடிமக்கள்: சமுதாயத்திற்குச் சிறப்புச் சேர்ப்பவர்கள் (சிங்கப்பூர் 21)<br>• சிங்கப்பூரை நேசித்தல் (DOE)<br>• நம் எதிர்காலத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது (NE)<br>• பொருளியல் அறிவு |

# பொறுப்புணர்வு

பொறுப்புணர்வு மிக்க ஒருவர், தான், தன் குடும்பம், சமூகம், நாடு, உலகம் ஆகியவற்றோடு தனக்குள்ள கடமையை அறிந்துகொள்வார். அவர் அவற்றை ஏற்றுக்கொண்டு தமது பொறுப்புகளை நேசத்துடனும் கடப்பாட்டுடனும் நிறைவேற்றுவார்.

# பொறுப்புணர்வு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. பொறுப்புள்ள பிள்ளையாக இருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• தன் பொறுப்பைக் கடைப்பிடிப்பர்<br>• குடும்பத்தில் தங்களுக்குள்ள கடமைகளை அறிந்து கொள்வர்<br>• குடும்பத்தில் உள்ள கடமைகளையும் பொறுப்புகளை அறிந்து செயல்படுதல் | • எனக்கு நானே எப்படி பொறுப்பேற்றுக்கொள்வது?<br>சில வழிகள்:<br>– என்னால் செய்ய முடிந்தவற்றைச் சுதந்திரமாக நானே செய்தல்<br>– சேமிக்கும் நல்ல பழக்கத்தை வளர்த்துக்கொள்ளுதல்<br>• குடும்பத்தில் எனக்குள்ள கடமைகள் என்ன?<br>சில கடமைகள்:<br>– பிள்ளை<br>– பேரப்பிள்ளை<br>– சகோதர சகோதரிகள் | • போற்றிப் பாராட்டுதல்<br>• பரிவு<br>• நல்லிணக்கம்<br>• மதிப்பு<br>• குடும்பமே சமுதாய அடிப்படை (நம் பொதுப் பண்புகள்)<br>• சிங்கப்பூர்க் குடும்பப் பண்புகள்<br>• வலுவான குடும்பங்கள்: நமது அடிப்படையும் நமது எதிர்காலமும் (சிங்கப்பூர் 21)<br>• பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்களின் நலனை முதலில் வைத்தல் (DOE)<br>• சுய நிர்வாகத் திறன்<br>• சமூக விழிப்புணர்வு |

## பொறுப்புணர்வு
### கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • என் குடும்பத்தில் எனக்குள்ள பொறுப்புகள் என்ன?<br>எனக்குள்ள சில பொறுப்புகளில் இவையும் அடங்கும்:<br>– பெற்றோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடத்தல்<br>– கற்றுக்கொள்வதில் ஆர்வமும் விடாமுயற்சியுமுள்ளவனாக இருத்தல்<br>– பெற்றோர்கள், சகோதர சகோதரிகளை மற்றும் குடும்பத்தில் உள்ள மற்றவர்களையும் நேசித்தல்<br>– செய்யக்கூடிய வீட்டுப் பணிகளில் பெற்றோர்களுக்கு உதவுதல் | |

# பொறுப்புணர்வு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 2. சிறந்த குழு உறுப்பினராக இருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• குழுவுணர்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வர்<br><br>• சிறந்த குழு உறுப்பினராக இருப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்வர்<br><br>• சிறந்த குழு உறுப்பினரின் தன்மைகளை வெளிப்படுத்துவர் | • குழுஉணர்வு ஏன் முக்கியம் பெறுகிறது?<br>தனி மனிதர் செய்யக்கூடியதற்கும் மேலாக நாம் சாதிக்க குழு உணர்வு உதவுகிறது.<br><br>• குழுவில் சிறந்த உறுப்பினராக ஏன் இருக்கவேண்டும்?<br>சிறந்த குழு உறுப்பினர் பின்வருவனவற்றைச் செய்வார்:<br>– குழு அதன் இலக்குகளை அடைய உதவுவார்<br>– இனிமையான, நல்லிணக்கமான சூழலை உருவாக்க உதவுவார் | • போற்றிப்பாராட்டுதல்<br>• பரிவு<br>• நாணயம்<br>• மதிப்பு<br>• மற்றவர்களுடன் தொடர்புகொள்ளுதல்<br>• சமூகப் பிணைப்பு<br>• கருத்திணக்கம், பிணக்கம் அல்ல (நம் பொதுப் பண்புகள்)<br>• பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்களின் நலனை முதலில் வைத்தல் (DOE)<br>• மற்றவர்களுடன் தோழமை கொள்ளுதல் (DOE)<br>• உறவுகளை நிர்வகிக்கும் திறன் |

# பொறுப்புணர்வு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • நான் எப்படி ஒரு சிறந்த குழு உறுப்பினராக இருப்பது?<br>சில வழிகள்:<br>– ஒருவரையொருவர் ஊக்குவித்தல்<br>– ஒவ்வொருவரின் பங்களிப்பையும் போற்றிப்பாராட்டுதல்<br>– நமது தவறுகளை ஒப்புக்கொள்ளுதல்<br>– பொறுப்புகளைப் பகிரிந்துகொள்ளுதல்<br>– கவனமாகக் கேட்டல்<br>– திறந்த மனதுடன் இருத்தல்<br>– எதையும் சிறப்பாகச் செய்தல்<br>– சரியான தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல், எ.கா. மாணவர் தலைவர்கள், சட்டாம்பிள்ளைகள் | |

# பொறுப்புணர்வு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 3. சமூகப் பொறுப்புள்ளவராக இருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• சமூகப் பொறுப்புணர்வின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வர்<br>• சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்துவர் | • சமூகப் பொறுப்புணர்வு என்றால் என்ன?<br>பள்ளியில் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ளும் சில எ.கா:<br>– பள்ளியின் சொத்துகளைக் கவனித்துக்கொள்ளுதல், எ.கா. குப்பை போடாதிருத்தல், பொருட்களை அழிக்காமலிருத்தல், நூலகப் புத்தகங்களைக் கவனமுடன் பார்த்துக்கொள்ளுதல்<br>– உணவகத்தில் உணவருந்திய பின்னர் தட்டு, முள்கரண்டி போன்றவற்றைத் திருப்பிக்கொடுத்தல்<br>– சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல், எ.கா. ‘திசுத்’ தாளில் தும்முதல் | • போற்றிப் பாராட்டுதல்<br>• பரிவு<br>• மதிப்பு<br>• சமூகத்திலும் உயர்ந்தது தேசம், தம்மினும் உயர்ந்தது சமுதாயம் (நம் பொதுப் பண்புகள்)<br>• சுறுசுறுப்பான குடிமக்கள்; சமுதாயத்திற்குச் சிறப்புச் சேர்ப்பவர்கள் (சிங்கப்பூர் 21)<br>• நலமான பண்புகளை உருவாக்கிக் கொள்ளுதல் (DOE)<br>• சமூக விழிப்புணர்வு |

# பொறுப்புணர்வு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • <u>நான் ஏன் சமூகப் பொறுப்புணர்வு உள்ளவராக இருக்கவேண்டும்?</u><br>அதற்கான சில காரணங்கள்:<br>– சிறந்த சுற்றுச்சூழலை உருவாக்குதல்<br>– மற்றவர்களின் நலனுக்குப் பங்காற்றுதல்<br><br>• <u>சமூகப் பொறுப்புணர்வு உள்ளவராக இருக்கும்பொருட்டு நான் என்ன செய்ய வேண்டும்?</u><br>அவற்றில் சில வழிகள்:<br>– பள்ளிச் சொத்துகளைக் கவனத்துடன் பயன்படுத்துதல்<br>– பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல் | |

# பொறுப்புணர்வு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 4. விதிமுறைகளையும் சட்டங்களையும் மதித்து நடத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• விதிமுறைகளும் சட்டங்களும் இருப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல்<br>• விதிமுறைகள் மற்றும் சட்டங்களை மதித்து நடத்தல் | • ஒருவர் மதித்து நடக்கவேண்டிய சில விதிமுறைகளும் சட்டங்களும் என்ன?<br>சில எ.கா.:<br>– பள்ளி விதிமுறைகள்<br>– தேசிய சட்டங்களும் விதிமுறைகளும், எ.கா. சாலைப் பாதுகாப்பு விதிமுறைகள், குப்பைபோடக் கூடாது, துப்பக்கூடாது, பொது சொத்துகளை அழிக்கக்கூடாது, விலங்குகளைத் துன்புறுத்தக்கூடாது | • போற்றிப் பாராட்டுதல்<br>• பரிவு<br>• மதிப்பு<br>• சமூகத்தினும் உயர்ந்தது தேசம், தம்மினும் உயர்ந்தது சமுதாயம் (நம் பொதுப் பண்புகள்)<br>• தவற்றிலிருந்து சரியானதை வேறுபடுத்த இயலுதல் (DOE)<br>• சமூக விழிப்புணர்வு |

# பொறுப்புணர்வு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • விதிமுறைகளையும் சட்டங்களையும் மதித்து நடப்பது முக்கியம், ஏன்?<br>அதற்கான காரணங்களில் சில :<br>– தன் பாதுகாப்புக்காக<br>– பள்ளியில் கட்டொழுங்கான நடத்தையை உறுதி செய்தல், எ.கா. ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்குச் செல்லும்போது முறையான பழக்கத்தைக் கடைப்பிடித்தல்<br>– தன் நலனுக்காகவும் சமுதாயத்தில் உள்ள மற்றவர்களின் நலனுக்காகவும் | |

# பொறுப்புணர்வு
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. தற்கட்டுப்பாடுடன் இருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• தன்னொழுக்கத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வர்<br><br>• தன்னொழுக்கத்தை வெளிப்படுத்துவர் | • <u>தன்னொழுக்கம் என்றால் என்ன?</u><br>செய்யவேண்டியவற்றிலிருந்து கவனம் சிதறாமல் ஒருவர் தன்னைத்தானே சிறப்பாகச் சமாளித்தல் தன்னொழுக்கமாகும். எ.கா. பள்ளிப்பாடங்களைச் செய்து முடிப்பதில் கண்ணும் கருத்துமாயிருத்தல்.<br><br>• <u>தன்னொழுக்கம் முக்கியம், ஏன்?</u><br>அதற்கான சில காரணங்கள்:<br>– சிறந்த பழக்கங்களை வளர்த்துக்கொள்ளுதல்<br>– நமது இலக்குகளை அடைதல்<br>– மற்றவர்களின் நன்மதிப்பை ஈட்டுதல்<br>– பயன்மிக்க, செயல்திறனுள்ளவராக இருத்தல் | • நலமான பண்புகளை உருவாக்கிக்கொள்ளுதல் (DOE)<br>• பொருளியல் அறிவு<br>• நிதியியல் அறிவு<br>• சுய நிர்வாகத் திறன் |

# பொறுப்புணர்வு
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • தன்னொழுக்கம் உள்ள ஒருவராக இருக்க நான் என்ன செய்யவேண்டும்?<br>சில வழிகள்:<br>– ஒருவர் எங்கிருக்கிறார் என்பதைப் பெற்றோர்களிடம் தெரிவித்தல்<br>– இணையத்தைப் பயன்படுத்தும்போது கூர்ந்தறிவுடன் நடந்துகொள்ளுதல் எ.கா. விரும்பத்தகாத உள்ளீடுகள் உள்ள தளங்களைப் பார்வையிடாமல் இருத்தல்<br>– பள்ளிவேலைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்தல்<br>– பணத்தை அறிவார்ந்த வகையில் பயன்படுத்துதல், எ.கா. சேமித்து வைத்திருத்தல், தேவையில்லாமல் செலவழிக்கக்கூடாது | |

## பொறுப்புணர்வு
### மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
| --- | --- | --- | --- |
| 2. பொறுப்புமிக்க குழுத் தலைவராக இருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• ஒரு சிறந்த குழுத் தலைவரின் பண்புகளை அறிந்திருப்பர்<br><br>• நல்ல குழுத்தலைவராக இருக்கத் தேவையான பழக்கங்களைக் கடைப்பிடிப்பர் | • நான் எப்படி ஒரு நல்ல குழுத் தலைவராக இருப்பது?<br>நான் கடைப்பிடிக்கக்கூடிய சில பண்புகள்:<br>– சிறந்த முன்னுதாரணமானவராக நடந்துகொள்ளுதல்<br>– பணிவுமிக்கவராகவும் மற்றவர்களின் கருத்துகளுக்குச் செவிசாய்க்கக்கூடியவராகவும் இருத்தல்<br>– ஒத்துழைக்குமாறும் தொடர்புகொள்ளுமாறும் மற்ற உறுப்பினர்களை ஊக்குவித்தல்<br>– குழு இலக்குகளில் கவனம் செலுத்த மற்ற உறுப்பினர்களுக்கு உதவுதல்<br>– மற்றவர்களுடன் பொறுப்புகளைச் சரிசமாகப் பகிர்ந்துகொள்ளுதல்<br>– உறுப்பினர்களின் வலிமைகளை அறிந்து செயல்படுதல் | • போற்றிப்பாராட்டுதல்<br>• பரிவு<br>• நல்லிணக்கம்<br>• நேர்மை<br>• மதிப்பு<br>• சமூகப் பிணைப்பு<br>• கருத்திணக்கம், பிணக்கம் அல்ல (நம் பொதுப் பண்புகள்)<br>• பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்களின் நலனை முதலில் வைத்தல் (DOE)<br>• சுய நிர்வாகத் திறன் |

# பொறுப்புணர்வு
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
| --- | --- | --- | --- |
| 3. நல்ல குடிமகனாக இருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• ஒரு நல்ல குடிமகனின் பொறுப்புகளைப் புரிந்துகொள்வர்<br><br>• சிறந்த குடிமகனாக இருப்பதை வெளிப்படுத்துவர் | • நான் ஒரு சிறந்த குடிமகனாக இருப்பது எவ்வாறு?<br>நான் கடைப்பிடிக்கக்கூடிய சில தன்மைகள்:<br>– சட்டங்களையும் விதிமுறைகளையும் கடைப்பிடித்தல்<br>– நாட்டின் இலக்கியல்களைக் கட்டிக்காத்தல்<br>– நாட்டின் நற்பெயரைக் கட்டிக்காத்தல்<br>– பொது சொத்துகளைக் கவனித்துக்கொள்ளுதல்<br>– நாட்டைத் தற்காத்தல் | • போற்றிப்பாராட்டுதல்<br>• பரிவு<br>• நல்லிணக்கம்<br>• நேர்மை<br>• மதிப்பு<br>• சமூகப் பிணைப்பு<br>• சமூகத்தினும் உயர்ந்தது தேசம்; தம்மினும் உயர்ந்தது சமுதாயம் (நம் பொதுப் பண்புகள்)<br>• ஒவ்வொரு சிங்கப்பூரரும் முக்கியம் (சிங்கப்பூர் 21) |

## பொறுப்புணர்வு
### மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | – சரியான தலைவர்களை எ.கா., சமூகத்தின் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல்<br>– நாட்டிற்காக ஆகச் சிறந்தவற்றைச் செய்தல்<br>– நாட்டின் வரையறைகளைப் புரிந்துகொள்ளுதல், எ.கா. இயற்கை வளம் இன்மை | • சுறுசுறுப்புமிக்க குடிமக்கள்: சமூகத்திற்குச் சிறப்பு சேர்ப்பவர்கள் (சிங்கப்பூர் 21)<br>• சிங்கப்பூரை நேசித்தல் (DOE)<br>• சிங்கப்பூர் நமது தாயகம் ; இந்த நாட்டிற்கு உரிமையுடையவர்கள் நாம் (NE)<br>• சிங்கப்பூரை நாமே தற்காக்க வேண்டும் (NE) |

# நேர்மை

நேர்மையான ஒருவர் நெறிசார்ந்த கொள்கைகளைப் பின்பற்றுவதுடன் சரி என்று கருதுவதைத் துணிவுடன் தற்காத்துக் கூறுவார்.

# நேர்மை
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. நாணயமிக்கவராக இருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• நாணயமிக்கவராக இருத்தலின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வர்<br><br>• நாணயமான பண்புகளை வெளிப்படுத்துவர் | • நாணயம் என்றால் என்ன?<br>சொல்லிலும் செயலிலும் தன்னிடமும் மற்றவர்களிடமும் உண்மையாக நடந்துகொள்வதே நாணயமாகும். நாணயமானவர் பொய் கூறுமாட்டார், ஏமாற்றமாட்டார், திருடமாட்டார்.<br><br>• நான் ஏன் நாணயமாக இருக்க வேண்டும்?<br>சில காரணங்கள்:<br>– மற்றவர்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெற<br>– மற்றவர்களுடன் நல்லிணக்க உறவுகளை உருவாக்கிக்கொள்ள | • நியாயமாக நடந்துகொள்ளுதல்<br>• அறநெறிசார்ந்த துணிவு<br>• மதிப்பு<br>• நம்பகம்<br>• தவறிலிருந்து சரியானதை வேறுபடுத்த இயலுதல் (DOE)<br>• சுய விழிப்புணர்வு |

## நேர்மை
### கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • நான் நாணயமிக்க ஒருவராக இருப்பது எப்படி?<br>நாணயமிக்கவர்:<br>– தன் தவறுகளை ஒப்புக்கொள்வார்<br>– உண்மை பேசுவார்<br>– தனக்குச் சொந்தமில்லாதவற்றைத் உரியவரிடம் திருப்பிக் கொடுப்பார்<br>– பள்ளிப்பாடங்களைச் செய்யும்போது மற்றவர் எழுதுவதைப் பார்த்து எழுதமாட்டார்<br>– தேர்வுகளில் ஏமாற்றமாட்டார் | |

# நேர்மை
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 2. நம்பத்தகுந்தவராக இருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• நம்பத்தகுந்தவராக இருப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பர்<br><br>• நம்பகத்தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவர் | • நம்பகத்தன்மை என்றால் என்ன?<br>நம்பகத்தன்மை என்பது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருத்தல் எனப் பொருள்படும். நம்பிக்கைக்குரியவர், அவர் சொன்னதுபோல் நடந்துகொள்வார். மேலும், மற்றவர்களிடம் பொறுப்புடன் நடந்துகொள்வார்.<br><br>• நான் ஏன் நம்பிக்கைக்குரியவனாக இருக்கவேண்டும்?<br>நம்பிக்கைக்குரியவர்:<br>– மற்றவர்களின் நம்பிக்கையைப் பெறுகிறார்<br>– மற்றவர்களுடன் நல்லிணக்கமான உறவை உருவாக்குகிறார்<br>– நெறிசார்ந்த முடிவுகளைச் செய்வார் | • நியாயமாக நடந்துகொள்ளுதல்<br>• நாணயம்<br>• அறநெறிசார்ந்த துணிவு<br>• மதிப்பு<br>• நம்பகத்தன்மை<br>• தவற்றிலிருந்து சரியானதை வேறுபடுத்த இயலுதல் (DOE)<br>• சுய விழிப்புணர்வு |

# நேர்மை
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • நான் நம்பிக்கைக்குரிய ஒருவராக இருப்பது எப்படி?<br>நம்பிக்கைக்குரியவர்:<br>– வாக்குறுதிகளைக் காப்பாற்றுவார்<br>– மற்றவர்களைப்பற்றிப் புறம்கூறமாட்டார்<br>– அறநெறி சார்ந்த துணிவு இருக்கும், எ.கா. தாங்கள் காணும் நெறியற்ற செயல்களைச் சுட்டிக்காட்டுவர் | |

# நேர்மை
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. நியாயமுடன் நடந்து கொள்ளுதல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• நியாயமுடன் நடந்து கொள்வதன் முக்கியத்துவத்தைப் பற்றி அறிந்திருப்பர்<br><br>• எல்லா சூழ்நிலையிலும் நியாயமான முடிவுகளை எடுப்பர். | • நியாயம் என்றால் என்ன?<br>நியாயம் என்பது மற்றவர்களின் திறனை மதித்து மற்றவர்கள்மீது பாகுபாடு காட்டாமல் இருப்பதாகும்.<br><br>• மற்றவர்களிடம் நான் ஏன் நியாயமாக நடந்துகொள்ளவேண்டும்?<br>நியாயம் கீழ்க்காண்பனவற்றுக்கு வழிவகுக்கும்:<br>– சமத்துவம்<br>– நீதி<br>– நல்லிணக்கமும் அமைதியும் | • நாணயம்<br>• அறநெறிசார்ந்த துணிவு<br>• மதிப்பு<br>• நம்பகம்<br>• எல்லோருக்குமான வாய்ப்புகள் (சிங்கப்பூர்21)<br>• தவற்றிலிருந்து சரியானதை வேறுபடுத்த இயலுதல் (DOE)<br>• தகுதிக்கு முதன்மை கொடுப்போம், ஊழலைத் தடுப்போம் (NE)<br>• சமூக விழிப்புணர்வு<br>• சுய நிர்வாகத் திறன்<br>• பொறுப்புடன் முடிவெடுத்தல் |

# நேர்மை

## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • நான் மற்றவர்களிடம் எப்படி நியாயமாக நடந்துகொள்வது?<br>சில வழிகள்:<br>– செயலுக்கு முன்னர் அறநெறிசார்ந்த பகுத்தாய்வில் ஈடுபடுதல்<br>– நமது சுயநல நோக்கங்கள் குறித்து அறிந்திருப்பதுடன் முடிவுகள் செய்யும்போது அவற்றிற்கு எதிராக நடந்துகொள்ளுதல்<br>– அச்சமின்றி விதிகளையும் சட்டவிதிமுறைகளையும் கடைப்பிடித்தல், எ.கா. தலைவர் பதவிப் பொறுப்பை ஏற்கும்போது<br>– திறனுக்கு ஏற்ற மதிப்பு, எ.கா. திறன் அடிப்படையில் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல் | |

# நேர்மை
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 2. சரியானதைத் தற்காத்து நிற்றல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• அறிவுசார்ந்த துணிவின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்வர்<br>• சிரமமான சூழலில் அறிவுசார்ந்த துணிவைக் காட்டுவர் | • சரி என்று கருதுவதை நான் ஏன் தற்காக்க வேண்டும்?<br>அவ்வாறு செய்வதால் ஒருவர்:<br>– மற்றவர்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெறுவார்<br>– மற்றவர்களுடன் இணக்கமான உறவுகளை உருவாக்கிக்கொள்வார்<br>– அறநெறிசார்ந்த தேர்வுகளைப் பொறுப்புடன் செய்வார் | • நியாயம்<br>• நாணயம்<br>• அறநெறிசார்ந்த துணிவு<br>• மதிப்பு<br>• நம்பகம்<br>• தவற்றிலிருந்து சரியானவற்றை வேறுபடுத்த இயலுதல் (DOE)<br>• தகுதிக்கு முதன்மை கொடுப்போம், ஊழலைத் தடுப்போம் (NE)<br>• சுய விழிப்புணர்வு<br>• பொறுப்புடன் முடிவெடுத்தல் |

# நேர்மை
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • சரி என்று கருதுவதை ஆதரித்துத் தற்காக்க வேண்டும் என்றால் நான் என்ன செய்யவேண்டும்?<br>சில வழிகள்:<br>– மற்றவர்கள் கவனிக்காத போதும் விதிகளையும் சட்டங்களையும் மதித்து நடத்தல்<br>– நாம் காணும் குற்றச் செயல்களைத் தக்கவர்களிடம் தெரிவித்தல், எ.கா. திருட்டு, விலங்குகளைத் துன்புறுத்துதல்<br>– மற்றவர்களிடம் நியாயமாக நடந்துகொள்ளுதல், எ.கா. பதிப்புரிமைகளை மதித்தல், நேர்மையாக இருத்தல்<br>– பிரச்சினைகளுக்குத் தார்மீக முடிவுகளை எடுத்தல், எ.கா. உயிரியியல்துறையில் ஆய்வு மேற்கொள்ளும்போது | |

# பரிவு

பரிவுமிக்க ஒருவர் கனிவு மற்றும் கருணையுணர்வுடன் செயல்படுவார். சமூகம் மற்றும் உலகின் நலனுக்காக அவர் தம் பங்கை அளிப்பார்.

# பரிவு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. தன்னைக் கவனித்துக்கொள்ளுதல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• சிறந்த பழக்கங்களை வளர்த்துக் கொள்ளுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்வர்<br>• தன் கவனிப்பில் சிறந்த பழக்கங்களை வெளிப்படுத்துவர்<br>• தன் பாதுகாப்புப் பழக்கத்தைக் கடைப்பிடிப்பர் | • <u>என்னை நான் எப்படிக் கவனித்துக்கொள்வது?</u><br>சில வழிகள்:<br>– சிறந்த பழக்கங்களை வளர்த்துக்கொள்ளுதல்<br>– தீங்கிலிருந்து என்னைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுதல்<br>• <u>என்னை நான் எப்படிப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வது ?</u><br>சில வழிகள்:<br>– ஆபத்தான பொருட்களைக் கவனமுடன் கையாளுதல்<br>– சந்தேகத்திற்குரியவர்களிடமிருந்து என்னைப் பாதுகாத்துக்கொள்ளுதல்<br>– பெரியவர்களிடமிருந்து உதவி நாடுதல் | • நேர்மை<br>• பொறுப்புணர்வு<br>• தன் அறநெறிக்கருத்துகள்<br>• தன்னம்பிக்கை<br>• தன் மதிப்பு<br>• தன் மானம்<br>• தன் கட்டொழுங்கு<br>• தன் கௌரவம்<br>• ஒவ்வொரு சிங்கப்பூரரும் முக்கியம் (சிங்கப்பூர் 21)<br>• நலமான பண்புகளை உருவாக்கிக் கொள்ளுதல் (DOE)<br>• சமூக விழிப்புணர்வு<br>• பொறுப்புடன் முடிவெடுத்தல் |

## பரிவு
### கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 2. என் குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளுதல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• தங்கள் குடும்பத்தினர்மீது அன்பும் பரிவும் காட்டவேண்டிய அவசியத்தைப் புரிந்துகொள்வர்<br><br>• தங்களின் குடும்பத்தின் மீது அன்பையும் பரிவையும் காட்டுவர் | • <u>என் குடும்பத்திற்கு நான் ஏன் அன்பையும் பரிவையும் காட்டவேண்டும்?</u><br>என் குடும்பத்தினரிடம் அன்பையும் பரிவையும் காட்டுவதால், நான் மகிழ்ச்சியான ஒற்றுமையான குடும்பத்தை உருவாக உதவுகிறேன்.<br><br>• <u>நான் எவ்வாறு என் குடும்பத்திடம் அன்பையும் பரிவையும் காட்ட முடியும்?</u><br>சில வழிகள்:<br>– அவர்களிடம் புரிந்துணர்வும் அக்கறையும் காட்டுதல், எ.கா. நலமில்லாத குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதலாக இருந்து உதவுதல் | • போற்றிப்பாராட்டுதல்<br>• நல்லிணக்கம்<br>• மதிப்பு<br>• குடும்பமே சமுதாய அடிப்படை (நம் பொதுப் பண்புகள்)<br>• சிங்கப்பூர்க் குடும்பப் பண்புகள்<br>• வலுவான குடும்பங்கள் : நமது அடித்தளமும் எதிர்காலமும் (சிங்கப்பூர் 21)<br>• பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்களின் நலனை முதலில் வைத்தல் (DOE)<br>• சமூக விழிப்புணர்வு |

# பரிவு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
| --- | --- | --- | --- |
| | | – குடும்ப உறுப்பினர்களின் உணர்ச்சிகள் குறித்து புரிந்துணர்வு காட்டுதல்<br>– குடும்ப உறுப்பினர்களின் சிறப்புவாய்ந்த நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக் கொண்டாடுதல், எ.கா. பிறந்தநாட்கள், தந்தையர் தினம், அன்னையர் தினம்<br>– அவர்களுடன் நேரத்தைச் செலவிடுதல், எ.கா. குடும்ப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல் | |

# பரிவு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 3. நல்ல நண்பராக இருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• நல்ல நண்பரின் குணநலன்களைப் புரிந்துகொள்வர்<br>• நல்ல நட்பை உருவாக்குவது பற்றியும் அதனைக் கட்டிக்காப்பது பற்றியும் புரிந்துகொள்வர் | • ஒரு நல்ல நண்பனின் குணநலன்கள் என்ன?<br>நல்ல நண்பன் என்பவன், நேர்மைமிக்கவனாகவும், நம்பிக்கைமிக்கவனாகவும், பரிவுமிக்கவனாகவும் இருப்பான். அவன் என் நலனில் அக்கறை கொண்டிருப்பதுடன் நான் ஒரு சிறந்த மனிதனாக வருவதற்கும் உதவுவான். | • போற்றிப்பாராட்டுதல்<br>• நாணயம்<br>• மதிப்பு<br>• சமூகப் பிணைப்பு<br>• உணர்வுப்பூர்வமான அறிவுத்திறன்<br>• மற்றவர்களுடன் தொடர்புகொள்ளுதல்<br>• கருத்திணக்கம், பிணக்கம் அல்ல (நம் பொதுப் பண்புகள்)<br>• மற்றவர்களுடன் தோழமை கொள்ளுதல் (DOE)<br>• உறவுகளை நிர்வகிக்கும் திறன் |

# பரிவு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • நல்ல நண்பனாக இருப்பதற்கு நான் என்ன செய்யலாம்?<br>சில வழிகள்:<br>– நாணயமிக்கவராக இருத்தல்<br>– பிணக்கம் தரும் செயல்களைத் தவிர்த்தல்<br>– ஒருவரோடொருவர் பேசும்போது பணிவன்புடன் நடந்துகொள்ளுதல்<br>– நாம் தவறு செய்யும்போது மன்னிப்புக் கேட்டல்<br>– அவர்கள் தவறுகள் செய்யும்போது மன்னித்துவிடுதல்<br>– நமது வாக்குறுதிகளைக் காப்பாற்றுதல்<br>– குறைநிறைகள் இருப்பினும் அவர்களை மதித்து ஏற்றுக்கொள்ளுதல் | |

# பரிவு

## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 4. சுற்றுச்சூழல் மீது அக்கறை காட்டுதல் | • மாணவர்கள் பின்வரும் திறனைப் பெற்றிருப்பர்:<br><br>• சுற்றுச்சூழல் மீது அக்கறை காட்டி அதனைப் போற்றிப்பாராட்டுவர் | • சுற்றுச்சூழல் குறித்து நான் எதனைப் போற்றிப்பாராட்டுகிறேன்?<br>இயற்கை அழகையும் இயற்கைச் சுற்றுச்சூழல் முறையையும் நான் போற்றிப்பாராட்டுகிறேன்<br><br>• நான் ஏன் சுற்றுச்சூழல் மீது அக்கறை காட்டவேண்டும்?<br>சில காரணங்கள்:<br>– வாழ்வதற்குச் சுற்றுச்சூழல் உகந்ததாக இருப்பதை உறுதிசெய்ய<br>– காற்று, நீர், உணவு, மற்றும் இதர இயற்கை வளங்களுக்கு நாம் சுற்றுச்சூழலை நம்பியுள்ளோம் | • போற்றிப் பாராட்டுதல்<br>• மதிப்பு<br>• பொறுப்புணர்வு<br>• எதனையும் துருவிப் பார்க்கும் பண்பு இருத்தல் (DOE)<br>• நலமான பண்புகளை உருவாக்கிக்கொள்ளுதல் (DOE)<br>• சிங்கப்பூர் நமது தாயகம்; இந்த நாட்டிக்கு உரிமையுடையவர்கள் நாம் (NE)<br>• பொறுப்புடன் முடிவெடுத்தல் |

# பரிவு
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • <u>சுற்றுச்சூழல் மீது அக்கறை செலுத்த நான் என்ன செய்யலாம்?</u><br>சில வழிகள்:<br>– பள்ளி மற்றும் இதர இடங்களில் உள்ள பொதுச் சொத்துகளைக் கவனமுடன் பயன்படுத்துதல்<br>– சுற்றுச்சூழலைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்திருத்தல் | |

## பரிவு
### கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 5. விலங்குகள் மீது பரிவு காட்டுதல் | மாணவர்கள் பின்வரும் திறனைப் பெற்றிருப்பர்:<br><br>• விலங்குகள் மீது பரிவு காட்டுதலை வெளிப்படுத்துவர் | • விலங்குகள் மீது நான் எப்படி பரிவு காட்டுவது?<br>சில வழிகள்:<br>– அவற்றைத் துன்புறுத்தாமல் இருத்தல்<br>– தேவைப்படும்பொழுது உதவி செய்தல், எ.கா. நான் விலங்குகள் துன்புறுத்தப்படுவதைப் பார்க்கும்போது விலங்குகளுக்குத் துன்பம் விளைவிப்பதைத் தடுக்கும் சங்கம் (SPCA) போன்ற சம்பந்தப்பட்ட அமைப்புகளை அழைத்துத் தெரிவிக்கலாம் | • போற்றிப்பாராட்டுதல்<br>• மதித்தல்<br>• பொறுப்புணர்வு<br>• பொறுப்புடன் முடிவெடுத்தல் |

# பரிவு
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. குடும்ப நலனுக்குப் பங்களித்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• குடும்ப ஒற்றுமைக்கும் குடும்ப மகிழ்ச்சிக்கும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பங்காற்றுகின்றனர் என்பதைப் புரிந்துகொள்வர்<br>• குடும்பத்தின் ஒற்றுமைக்கும் மகிழ்ச்சிக்கும் பங்காற்றுவர் | • <u>என் குடும்பத்தின் நலனுக்கு நான் ஏன் பங்களிக்க வேண்டும்?</u><br>மகிழ்ச்சிமிக்க நல்லிணக்கமான குடும்பத்தை உருவாக்க குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் முயற்சிகளும் தேவைப்படும்.<br>• <u>என் குடும்பத்தின் நலனுக்குப் பங்களிக்க நான் என்ன செய்யலாம்?</u><br>சில வழிகள்:<br>– என் குடும்பத்தின் நற்பெயரைக் கட்டிக்காத்தல்<br>– என் குடும்ப வருவாய் மற்றும் செலவினங்களைப்பற்றித் தெரிந்திருத்தல்<br>– வேண்டாத தேவைகளை என் குடும்பம் மீது சுமத்தாதிருக்கப் புரிந்துணர்வு காட்டுதல் | • போற்றிப்பாராட்டுதல்<br>• நல்லிணக்கம்<br>• மதிப்பு<br>• குடும்பம் சமுதாயத்தின் அடிப்படைக் கூறு (நம் பொதுப் பண்புகள்)<br>• சிங்கப்பூர்க் குடும்பப் பண்புகள்<br>• வலுவான குடும்பங்கள்: நமது அடித்தளம் நம் எதிர்காலம் (சிங்கப்பூர் 21)<br>• பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்களின் நலனை முதலில் வைத்தல் (DOE)<br>• பொருளியல் அறிவு/நிதியியல் அறிவு<br>• உறவுகளை நிர்வகிக்கும் திறன் |

# பரிவு
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 2. சமுதாயம் மீது பரிவு காட்டுதல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• சமூகத்தில் உள்ள மக்கள் மீது, குறிப்பாகக் குறைந்த வசதியுடையவர்கள் மீது பரிவு காட்டும் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொள்வர்<br><br>• சமூகத்தில் உள்ள மக்கள்மீது, குறிப்பாக குறைந்த வசதியுள்ள மக்கள் மீது பரிவுகாட்டும் வழிவகைகளை வெளிப்படுத்துவர் | • என் சமூகத்தில் உள்ளவர்கள், குறிப்பாகக் குறைந்த வசதிகள் உள்ளவர்களைப் பற்றி நான் ஏன் கவலைப்படவேண்டும்?<br>நமது நாடு நமது இல்லம் என்பதால் நமது மக்களை நன்கு கவனித்துக்கொள்வதும் அவர்களின் எதிர்காலம் குறித்துச் சிந்திப்பதும் நமது பொறுப்பு ஆகும்.<br><br>• எனது சமூகத்தில் உள்ளவர்கள், குறிப்பாகக் குறைந்த வசதிகள் உள்ளவர்கள் மீது பரிவு காட்ட நான் என்ன செய்யலாம்?<br>சில வழிகள்:<br>– என் நாட்டில் குறைந்த வசதியுள்ளவர்களுக்கு உதவுதல், எ.கா. சமூக சேவையிலும் அறநிதி திரட்டும் இயக்கங்களிலும் பங்காற்றுதல் | • போற்றிப் பாராட்டுதல்<br>• புரிந்துணர்வு<br>• மதிப்பு<br>• பொறுப்புணர்வு<br>• சமூகப் பிணைப்பு<br>• தொண்டூழியம்<br>• தனி மனிதருக்குச் சமூக ஆதரவும் மதிப்பும் (நம் பொதுப் பண்புகள்)<br>• ஒவ்வொரு சிங்கப்பூரரும் முக்கியம் (சிங்கப்பூர் 21)<br>• சுறுசுறுப்புமிக்க குடிமக்கள்: சமுதாயத்திற்குச் சிறப்புச் சேர்ப்பவர்கள் (சிங்கப்பூர் 21)<br>• பகிர்ந்துகொள்ளுதல், மற்றவர்களின் நலனை முதலில் வைத்தல் (DOE)<br>• மற்றவர்களுடன் தோழமை கொள்ளுதல் (DOE)<br>• உறவுகளை நிர்வகிக்கும் திறன் |

# பரிவு
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | – உதவி தேவைப்படும்பொழுது உதவுதல், எ.கா. பிரச்சினையைக் காது கொடுத்துக் கேட்டல்<br>– உதவி செய்யும் அண்டைவீட்டாராக இருத்தல், எ.கா. அண்டைவீட்டார் வெளிநாடு சென்றிருந்தால் அவர்களின் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுதல் | |

## பரிவு
### மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 3. சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வர்<br><br>• சுற்றுச்சூழலின் பாதுகாப்பு மற்றும் பழமை பாதுகாப்பிற்கும் பங்காற்றுவர் | • சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியம் என்ன?<br>காரணங்களில் சில :<br>– சுகாதாரமான சுற்றுச்சூழலில் தொடர்ந்து வாழ்தல்<br>– இயற்கை மீதான சேதம் மீட்க முடியாதது<br>– ஒன்றை மீண்டும் முன்னைய நிலைக்குக்கொண்டுவர நாம் அதிகச் செலவு செய்ய வேண்டும்<br>• சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நான் என்ன செய்யலாம்?<br>சில வழிகள்:<br>– சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்காத பொருட்களைப் பயன்படுத்துதல்<br>– மறுபயனீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் | • போற்றிப்பாராட்டுதல்<br>• மதிப்பு<br>• பொறுப்புணர்வு<br>• தவற்றிலிருந்து சரியானதை வேறுபடுத்துதல் (DOE)<br>• சமூக விழிப்புணர்வு |

# மீளும்தன்மை

மீளும்தன்மையுடைய ஒருவரிடம் உணர்வுப்பூர்வ வலிமை இருப்பதுடன் சவால்களை விடாமுயற்சியுடன் எதிர்கொள்ளும் பண்பும் இருக்கும். துணிவு, நம்பிக்கை, சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளும்தன்மை, எந்த நிலைமையையும் செயல்திறன்களுடன் கையாளும் தன்மை உடையவராக இருப்பார்.

# மீளும் தன்மை
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. மாற்றங்களைக் கையாளுதல் | மாணவர்கள் பின்வரும் திறனைப் பெற்றிருப்பர்:<br><br>• வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பத் தங்களை மாற்றியமைத்துக்கொள்ளத் தெரிந்திருப்பர் | • என் வாழ்க்கையில் ஏற்பட்ட சில மாற்றங்கள் என்ன?<br>சில மாற்றங்கள்:<br>– குடும்பத்தில் மாற்றங்கள் எ.கா. குழந்தைப் பிறப்பு, மரணம் மற்றும் பிரிந்திருத்தல்<br>– புதிய சூழலுக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளுதல், எ.கா. புதுப் பள்ளி, புதிய நண்பர்கள்<br>– பள்ளி வேலைகளைச் சமாளித்தல்<br>– தோல்விகள்/ஏமாற்றங்கள்<br>– பெற்றோர்களின் நெருக்குதல் | • மாற்றியமைத்துக்கொள்ளுதல்<br>• நம்பிக்கை<br>• வழிவகை காணுந்திறன்<br>• எல்லோருக்கும் வாய்ப்புகள் (சிங்கப்பூர் 21)<br>• சுய விழிப்புணர்வு |

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • <u>மாற்றங்களால் நான் எவ்வாறு பாதிக்கப்படுகிறேன்?</u><br>மாற்றங்களால் ஏற்படும் உணர்வுகளை அடையாளங்காணுதல்:<br>– கவலை<br>– மன உளைச்சல்<br>– ஆர்வம் குன்றுதல்<br>– ஏமாற்றம்<br><br>• <u>நான் மாற்றங்களை எவ்வாறு கையாளலாம்?</u><br>சில வழிகள்:<br>– நம்மால் செய்ய முடியாதவற்றில் கவனம் செலுத்துவதைவிட செய்ய முடிந்தவற்றில் கவனம் செலுத்துதல்<br>– புதியவற்றைக் கற்றலும் செய்து பார்த்தலும்<br>– பிரச்சினைகளுக்கு மாறுபட்ட தீர்வுகளைக் காணுதல் | |

## மீளும் தன்மை
### கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 2. ஆர்வத்துடன் கற்பவர் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• கற்றலின் முக்கியத்துவத்தை அறிந்திருப்பர்<br>• கற்பதற்கான பேரார்வத்தை வெளிப்படுத்துவர் | • <u>கற்றல் என்பது எதைப் பற்றியது?</u><br>கற்றல் என்பது, பின்வருவன போன்ற புதிய அறிவையும் திறன்களையும் பெறுவதாகும்:<br>– புதிய ஆட்டம் அல்லது விளையாட்டைக் கற்றுக்கொள்ளுதல்<br>– கணினியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைக் கற்றுக்கொள்ளுதல்<br>• <u>கற்றல் எவ்வாறு எனக்கு உதவுகிறது?</u><br>கற்றல் எனக்குப் பின்வருமாறு உதவுகிறது:<br>– மாற்றங்களையும் புதிய நிலைமைகளையும் சமாளிக்க<br>– எதிர்காலத்திற்குத் தயாராக இருக்க | • போற்றிப் பாராட்டுதல்<br>• புத்தாக்கம்<br>• வாழ்நாள் கல்வி<br>• வழிவகை காணுந்திறன்<br>• எதனையும் துருவிப் பார்க்கும் பண்பு இருத்தல் (DOE)<br>• பொருளியல் அறிவு<br>• சுய நிர்வாகத் திறன் |

# மீளும் தன்மை
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • <u>கற்பதில் நான் எப்படி பேரார்வமிக்கவனாக இருக்க முடியும்?</u><br>சில வழிகள்:<br>– கேள்விகள் கேட்பதில் அச்சம் கொள்ளாதிருத்தல்<br>– அறிந்துகொள்வதற்கு ஆர்வமுள்ளவராக இருத்தல்<br>– புதிய அறிவை மகிழ்ச்சியுடன் பெறுதல்<br>– கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளும்போது ஆர்வத்துடன் இருத்தல்<br>– சிரமங்களை எதிர்கொள்ளும்போதும் விடாமுயற்சியுடன் இருத்தல் | |

# மீளும் தன்மை
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. தன்னம்பிக்கையுடன் இருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• தன்னம்பிக்கையுடன் இருப்பதன் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வர்<br><br>• சிரமமான காலத்திலும் தன்னம்பிக்கையுடன் இருப்பர் | • தன்னம்பிக்கை என்றால் என்ன?<br>தன்னம்பிக்கை உடையவர் இப்படி இருப்பார்:<br>– நல்லதே நடக்கும் என்ற மனப்போக்கைக் கொண்டிருப்பார்<br>– துள்ளி மீளுவதில் நம்பிக்கை கொண்டிருப்பார்<br>– சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றியமைத்துக்கொள்வார்<br><br>• நான் எவ்வாறு தன்னம்பிக்கையுடன் இருக்க முடியும்?<br>சில வழிகள்:<br>– செய்ய முடியாதனவற்றில் கவனம் செலுத்தாமல் அடையக்கூடிய தீர்வுகளின் மீது கவனம் செலுத்துதல் | • மாற்றியமைத்துக்கொள்ளும் தன்மை<br>• தன்னம்பிக்கை<br>• வழிவகை காணுந்திறன்<br>• எல்லோருக்கும் வாய்ப்புகள் (சிங்கப்பூர் 21)<br>• எதனையும் துருவிப் பார்க்கும் பண்பு இருத்தல் (DOE)<br>• சிங்கப்பூரின் வாழ்வுக்கு யாரும் கடப்பாடு கொண்டிருக்கவில்லை (NE)<br>• நம் எதிர்காலத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது (NE)<br>• சுய விழிப்புணர்வு<br>• சுய நிர்வாகத் திறன் |

## மீளும் தன்மை
### மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | – பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வுகளைக் காணுதல்<br>– குறைகூறலையும் ஆலோசனையையும் ஆக்ககரமாக ஏற்றுக்கொள்ளுதல்<br>– எதிர்மறையான நிகழ்வுகள் அல்லது உணர்வுகளில் மனதை ஈடுபடாதிருத்தல்<br>– திறந்த மனதுள்ளவராகவும் மாற்றங்களை ஏற்கக் கூடியவராகவும் இருத்தல் | |

## மீளும் தன்மை
### மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 2. மன உறுதி கொண்டிருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• மன உறுதியுடன் இருப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வர்<br><br>• இலக்குகளை அடைவதில் மன உறுதியுடன் இருத்தலைக் காட்டுவர் | • மன உறுதியுடன் இருத்தல் ஏன் முக்கியம் பெறுகிறது?<br>பின்வரும் போன்ற பின்னடைவுகளைச் சமாளிக்க மன உறுதி உதவ முடியும்:<br>– படிப்பில் சிறப்பாகச் செய்யாமை<br>– ஒன்றைச் சிறப்பாகச் செய்ய இயலாமை, எ.கா. நடனமாடுதல், பியானோ வாசித்தல்<br>– தோல்வியடைதல், எ.கா. சோதனைகளிலும் தேர்வுகளிலும்<br>– குடும்பத்திற்குள் பிரச்சினைகள், எ.கா. ஆட்குறைப்பின் காரணமாக ஏற்படும் பணப் பிரச்சினை | • மாற்றியமைத்துக்கொள்ளும் தன்மை<br>• தன்னம்பிக்கை<br>• வழிவகை காணுந்திறன்<br>• உணர்ச்சி வசப்படா வலிமை<br>• குடும்பக் கடப்பாடு (சிங்கப்பூர்க் குடும்பப் பண்புகள்)<br>• சிங்கப்பூருக்கு உதவ யாரும் நன்றிக் கடன்பட்டிருக்கவில்லை (NE)<br>• நம் எதிர்காலத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது (NE)<br>• பொருளியல் அறிவு<br>• நிதியியல் அறிவு<br>• சுய நிர்வாகத் திறன் |

## மீளும் தன்மை
### மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • என் இலக்குகளை அடைய நான் என்ன செய்யலாம்?<br>சில வழிகள்:<br>– தோல்விகளைச் சவால்களாகப் பார்த்தல்<br>– திறனைப் பெறக் கடினமாக உழைத்தல்<br>– துவண்டு விடாமல் தொடர்ந்து முயலுதல் | |

## மீளும் தன்மை
### மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 3. வழிவகை காணும் திறனுள்ளவர் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• வழிவகை காணும் திறனின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வர்<br><br>• பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வழிவகை காணுந்திறனை வெளிப்படுத்துவர் | • <u>வழிவகை காணுந்திறன் என்றால் என்ன?</u><br>வழிவகை காணுந் திறனுள்ளவர் பின்வரும் திறனுள்ளவராக இருப்பார்:<br>– சூழ்நிலைக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ளுதல்<br>– படைப்பாற்றலும் புத்தாக்கத்திறனும் கொண்டிருத்தல்<br>– உதவி நாடுவதில் அச்சமின்மை<br>– மற்றவர்களிடம் மனம் திறந்து பேசுவதில் அச்சமின்மை<br><br>• <u>சிரமங்களை எதிர்கொள்ளும்போது வழிவகை காணுந்திறன் கொண்டிருப்பது முக்கியமாகிறது ஏன்?</u><br>சில காரணங்கள்:<br>– பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மாற்றுவழிகளைக் காணுதல் | |

# மீளும் தன்மை
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | – ஒரு விஷயத்தைப் பல்வேறு கோணங்களில் பார்க்கும் வழிகளை ஆராய்தல்<br>– பிரச்சினைகளைச் சிறப்பாகச் சமாளிக்கும் வழிகள்<br>• வழிவகை காணுந்திறன் உள்ளவராக நான் எவ்வாறு ஆவது?<br>சில வழிகள்:<br>– தன் வளர்ச்சிக்குக் கடப்பாடுகொண்டிருத்தல்<br>– பரவலாகப் படித்தல்<br>– யோசனைகளையும் கருத்துகளையும் திறந்த மனதுடன் வரவேற்றல்<br>– மாற்றங்களை வரவேற்று ஏற்றுக்கொள்ளுதல்<br>– புதிய நோக்குகளைக் காணும் திறன் கொண்டிருத்தல் | • சூழ்நிலைக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ளுதல்<br>• படைப்பாற்றல் திறன்<br>• புத்தாக்கத் திறன்<br>• வாழ்நாள் கல்வி<br>• எதனையும் துருவிப் பார்க்கும் பண்பு (DOE)<br>• சிங்கப்பூரின் வாழ்வுக்கு யாரும் கடப்பாடு கொண்டிருக்கவில்லை (NE)<br>• நம் எதிர்காலத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது (NE)<br>• பொருளியல் அறிவு<br>• நிதியியல் அறிவு<br>• சுய நிர்வாகத் திறன் |

# நல்லிணக்கம்

நல்லிணக்கத்தை மதிக்கும் ஒருவர், நல்ல உறவுகளைக் கடைப்பிடிப்பதுடன் சமூக ஒருமைப்பாட்டையும் மேம்படுத்துவார். பல இன கலாச்சார சமுதாயத்தின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் உணர்ந்து பாராட்டுவார்.

# நல்லிணக்கம்
## கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. வெவ்வேறு இன நண்பர்களுடன் கூடிப் பழகுதல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• மற்ற இன நண்பர்களுடன் கூடிப் பழகுவர்<br>• மற்ற இன நண்பர்களுடன் கூடிப் பழகுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வர் | • வெவ்வேறு இன நண்பர்களைப் பெறுவது முக்கியம், ஏன்?<br>சில காரணங்கள்:<br>– நாம் பல இன சமுதாயத்தினர்<br>– ஒருவரையொருவர் புரிந்துகொள்ள<br>– நல்லிணக்கமான வாழ்க்கைச் சூழலை உருவாக்க<br>– அமைதியையும் நிலைத்தன்மையையும் மேம்படுத்த | • போற்றிப்பாராட்டுதல்<br>• மதிப்பு<br>• சமூகப் பிணைப்பு<br>• கருத்திணக்கம், பிணக்கம் அல்ல (நம் பொதுப் பண்புகள்)<br>• இன சமய நல்லிணக்கம் (நம் பொதுப் பண்புகள்)<br>• மற்றவர்களுடன் தோழமை கொள்ளுதல் (DOE)<br>• இன சமய நல்லிணக்கத்தைக் கட்டிக்காப்போம் (NE)<br>• சமய நல்லிணக்கப் பிரகடனம்<br>• சமூக விழிப்புணர்வு |

## நல்லிணக்கம்
### கீழ்த்தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • மற்ற இன நண்பர்ளுடன் சிறப்பாகக் கூடிப் பழக நான் என்ன செய்யலாம்?<br>சில வழிகள்:<br>– எளிமையான வாழ்த்துச் சொற்களைத் தெரிந்துகொள்ளுதல்<br>– அவர்களின் கலாச்சாரங்களையும் பழக்கவழக்கங்களையும் தெரிந்துகொள்ளுதல்<br>– அவர்களின் கலாச்சாரக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளுதல் | |

# நல்லிணக்கம்
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 1. கலாசார வேறுபாடுகளைக் கொண்டாடுதல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br><br>• நமது பல இன சமுதாயத்தில் சமய மற்றும் கலாச்சாரப் பழக்கவழக்கங்கள் சிலவற்றை அறிந்து அவற்றைப் பாராட்டிப்போற்றுவர் | • நமது பல இன சமுதாயத்தில் உள்ள சமய மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளில் சில எடுத்துக்காட்டுகள் என்ன?<br>சில எடுத்துக்காட்டுகள்:<br>– மலாய்க்காரர்கள்: எ.கா. நோன்பு பெருநாள், அன்றாடம் ஐந்துமுறை தொழுதல்<br>– சீனர்கள்: எ.கா. குடும்ப ஒன்றுகூடல் விருந்துகள், சீனப் புத்தாண்டு<br>– இந்தியர்கள்: எ.கா. தைப்பூசம், குழந்தைக்குப் பெயரிடும் சடங்கு | • போற்றிப் பாராட்டுதல்<br>• பரிவு<br>• சமூகப் பிணைப்பு<br>• மதிப்பு<br>• இன சமய நல்லிணக்கம் (நம் பொதுப் பண்புகள்)<br>• இன சமய நல்லிணக்கத்தைக் கட்டிக்காப்போம் (NE)<br>• சமய நல்லிணக்கப் பிரகடனம்<br>• சமூக விழிப்புணர்வு |

# நல்லிணக்கம்
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • பல இன சமுதாயத்தில் உள்ள வெவ்வேறு கலாச்சாரங்களைப் போற்றிப்பாராட்ட நான் என்ன செய்யலாம்?<br>சில வழிகள்:<br>– அவர்களைப்பற்றி மேலும் அறிந்துகொள்ளுதல்<br>– பல்வேறு கலாச்சாரக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளுதல் | |

# நல்லிணக்கம்
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| 2. மற்ற நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருத்தல் | மாணவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருப்பர்:<br>• மற்ற நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றைக் கட்டிக்காக்க வேண்டிய தேவையைப் புரிந்துகொள்ளுவர்<br>• மற்ற நாடுகளுடன் உள்ள நல்லுறவைக் கட்டிக்காக்க ஒவ்வொருவரும் எப்படிப் பங்காற்றலாம் என்பதைத் தெரிந்துகொள்வர் | • மற்ற நாடுகளுடன் நாம் ஏன் நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்?<br>சில காரணங்கள்:<br>– அவற்றுடன் நடைமுறை உறவுகளை உருவாக்கிக்கொள்ளுதல்<br>– உலக அமைதியையும் நிலைத்தன்மையையும் உருவாக்குதல்<br>– உதவிதேவைப்படும்போது ஒரு நாடு மற்ற நாட்டுக்கு உதவுதல், எ.கா. வளங்களைப் பகிர்ந்துகொள்ளுதல் | • போற்றிப் பாராட்டுதல்<br>• பரிவு<br>• ஒருவரையொருவர் சார்ந்திருத்தல்<br>• அனைத்துலக நட்புறவு<br>• அமைதி<br>• மதிப்பு<br>• சமூகக் குழுவினர்<br>• உலகச் சமூகம்<br>• நம் எதிர்காலத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது (NE)<br>• பொருளியல் அறிவு<br>• சமூக விழிப்புணர்வு |

# நல்லிணக்கம்
## மேல் தொடக்கநிலை

| தலைப்பு | கற்றலின் குறிக்கோள்(கள்) | பாட விரிவு | அறநெறிக் கருத்துகள் / தொடர்புடைய பண்புகள் / செய்திகள் |
|---|---|---|---|
| | | • <u>மற்ற நாடுகளுடன் நல்லுறவைக் கட்டிக்காக்க நாம் என்ன செய்யலாம்?</u><br>சில வழிகள்:<br>– அந்த நாடுகளின் கலாச்சாரம் பற்றி அறிந்துகொள்ளுதலும் புரிந்துகொள்ளுதலும், எ.கா. அனைத்துலக நட்புறவு தினத்தில் கலந்துகொள்ளுதல்<br>– நாம் அந்நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் போது அந்த நாடுகளின் விதிமுறைகளையும் சட்டங்களையும் மதித்து நடத்தல் | |